விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 23 ஞாயிற்றுக்கிழமை (08.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

ராம்கோ

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

## காணாமல்போனோர் என வடக்கில் எவரும் இல்லை!

### நட்டஈடு பெறுவதற்கே முயற்சி என்கிறார் பொன்சேகா

*(யாழ்ப்பாணம்)* வடக்கில் காணாமல் போனோர் என யாருமில்லை. அவ்வாறு தமது உறவுகளினை காணாமல் போனோர் என கூறுவதற்கு காரணம் அரசின் நஷ்டஈட்டினைப் பெறுவதற்கே என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதி எழிலன் உட்பட எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை. அவ்வாறு சரணடைந்தவர்கள் தற்போது ஜனாதிபதியின் குடும்பத்தினரோடு உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் தயார்நிலை ; ஜனாதிபதிக்கு அதிகாரம்

### வர்த்தமானி அறிவித்தலால் எதிர்ப்பு

இலங்கையின் சகல மாவட்டங்களிலும் இராணுவத்தைத் தயார் நிலையில் வைத்திருக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கும் வழங்கும் வர்த்தமானி அறிவித்தல் சவாலுக்குரியது என சட்டதரணிகள் தெரிவித்துள்ளனர்.

இவ் வர்த்தமானி அறிவித்தல் மாற்றப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் ஆராய இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இரண்டு சட்டத்தரணிகளை கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளை பெறுவதற்காக இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயற்குழு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு காரணம் மற்றும் வன்முறைகளை கட்டுப்படுத்த, (24ஆம் பக்கம் பார்க்க)

## தபால்மூல வாக்களிப்பை பீதியின்றி மேற்கொள்ளலாம்

### பிரதி தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தபால மூலம் வாக்களிக்கவுள்ள அரச உத்தி யோகதத்ர்கள் எவ்வித பயப் பீதியும் இன்றி சுதந்திரமாக வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யபபட்டுள்ளது என வடக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும் யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21-ம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக நாளை மற்றும் நாளை மறுதினம் தபால் மூல வாக்களிப்பதற்கான (23ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா துவாரகேஸ்வரன்

வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும் முதன்மை வேட்பாளரும்




## வாய்மொழிமூல அறிக்கையை சமர்ப்பிக்கிறார் நவிபிள்ளை!

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பான தனது வாய்மொழி மூல அறிக்கையை நாளை 09-ம் திகதி முதல் 27-ம் திகதி வரை ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் முன்வைக்க உள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை தொடர்பான இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், கூட்டத் தொடரில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க இலங்கை அரசாங்கம் இம்முறை விசேட பிரதிநிதிகளை அங்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் சிலர் மாத்திரமே இக்கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதற்கு (23ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013



ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்

சுந்தரம் டிவகலாலா

முன்னாள் செயலாளர், கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.

கல்வியின் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு.

## எழுச்சிகளை ஏற்படுத்த இலங்கையில் முயற்சி!

### ஜனாதிபதி தெரிவிப்பு

(மாத்தளை)

நாட்டில் ஒரு எழுச்சியையும் இன மற்றும் மத அடிப்படையிலான வேறுபாடுகளை மக்கள் மத்தியில் உருவாக்கி நாட்டை சீர்குலைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய கிழக்கு நாடுகளில் தொலைபேசி குறுஞ் செய்திகளை அனுப்பி, வீதிகளில் போராட்டங்களை நடத்தி, இளைஞர்களை தூண்டி விட்டு, மோதல்களை உருவாக்கி அந்நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டன.

இப்படியான குற்றச்சாட்டுகளும், கோரிக்கைகளும் மத்திய கிழக்கு நாடுகளின் அரசாங்கங்களை தூக்கியெறிய உருவாக்கப்பட்டன.

ஈராக், லிபியா, எகிப்து போன்ற நாடுகளில் (23ஆம் பக்கம் பார்க்க)

வடமாகாண சபைத் தேர்தல் 2013

(கிளிநொச்சி மாவட்டம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி




டாக்டர் கந்தசாமி திருலோகமூர்த்தி

தமிழினத்தின் தன்மானக் குரல் கிளிநொச்சியின் உரிமைக் குரல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கணனி திருத்தல்

கணனியில் ஏற்படும் சகலவித மான (Computer Hardware & Software) பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதுடன் உங்கள் இடத்தி ற்கே வந்து செய்து தரப்படும்

தொடர்பு :

**0773248792** (3897)


## கிளிநொச்சியில் விபத்து; நால்வர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் வானும் உழவு இயந்திரமும் மோதி விபத்துக்குள்ளாகியதில் 4 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இவ்விபத்து நேற்றுக் காலை 10 மணிக்கு பூங்காவனம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர் பிலான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (எ-8)

## வனாத்தவில்லுவில் சிவப்பு மழை

வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள வனாத்தவில்லு, ஸ்மாயில்புரத்தில் நேற்று காலை 7.30 மணியளவில் சிவப்பு மழை பெய்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள் ளனர்.

இவ்வாறு பெய்த மழை நீரை பிரதேச மக்கள் பாத்திரங்க ளில் சேகரித்து பொலி ஸாரிடம் ஒப்படைத் துள்ளனர். (எ-8)


## விற்பனைக்கு

TATA SUPER ACE

SUPER TURBO POWER A/C

தொடர்புகளுக்கு

**0772689583** (3849)

## மாதம் 250000/- வருமானம், உணவு, இருப்பிடம், ரிக்கெற் இலவசம்

முற்றிலும் புதிய வரவு...

6 மாதங்களுக்கு ஒரு தடவை இலவசமாக ஊர்வந்து போகலாம்.

2 வருட விசா, நீடிக்கப்படக் கூடிய உத்தரவாதம்.

வாரத்தில் 4 பேர் மட்டுமே இணைக்கப்படுவர்.

டென்மார்க்கில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு.

(காலை 8.30 - மாலை 6.30 வரை)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 021 2219016, 0215689090 (C-4666)

## A/L வரலாறு - 2015/2014

மாவட்ட, தேசிய மட்டங்களில் உயர் பெறுபேறு களைப் பெற்றிட வழிகாட்டும் உங்கள் ஆசான்

M.பத்மன் B.A(Hons) History

M.A (History)

* அளவான பாடக்குறிப்பு, சிறந்த விளக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றன.
* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

கற்பிக்கும் இடங்கள்

DMI யாழ்ப்பாணம் — புகழ் மானிப்பாய்

உயர்கலை கல்லூரி குளப்பிட்டி (சி-4658)

## UNIVERSITY OF CAMBRIDGE

## CAMBRIDGE ENGLISH

### AFTER A/L

August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞான முகாமைத்துவம் போன்ற பாடநெறிகளை பல்கலைக் கழகங்களில் ஆங்கில மொழிமூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும். ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரியசந்தர்ப்பம்.

**உடனடியாக**

***BRITISH COUNCIL* இன் ஆதரவுடன் 09.09.2013 இல் ஆரம்பிக்க இருக்கும்**

**Cambridge - Preliminary English Test (PET) வகுப்பில் சேருங்கள்.**

இது ஓர் Intermediate B, level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.

நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக Pet Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்க முடியும்.

நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் Pet பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் சேர்ந்தால் கற்க இலகுவாக இருக்கும்.

Subjects : Reading : writing, Listening, Speaking

Exam Fee : Rs 6900/=

Exam Date : 16.11.2013 - Colombo

Course Schedule

| | Mou - Tues - Wed - Thurs | Saturday & Sunday |
|---|---|---|
| Duaration | 10 weeks | 10 weeks |
| Time | 8.30 - 10.30, 10.30 - 12.30 | 2.00 - 5.00 |

**வகுப்புக்கள் 09.09.2013 இல் ஆரம்பமாகும்**

For Registration and Further details Contact

**BRITISH COLLEGE OF ENGLISH**

# 192, Navalar Road, Jaffna. Tel: 021 222 0384 / 0778803887

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) (3896)

## கடைத் தொகுதியுடன் உள்ள வீடும், காணியும் விற்பனைக்குண்டு

சாவகச்சேரி வர்த்தக மையப்பகுதியில் கண்டி வீதியில் புதிய வர்த்தக வங்கிக் கிளைக்கு அருகாமையில் டச்சு வீதி டிறிபேக் கல்லூரிக்கு முன்பாகவும் (நகர சபை கடைத் தொகுதிக்கு முன்பாக) உள்ள மூன்று கடைத் தொகுதியும் மற்றும் மேல் வீட்டுடன் உள்ளடங்கிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.

**0771738050** (3901)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

அதிகார் செல்லமுத்து வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள 'ராஜ்மகால்' எனும் பெயர் கொண்டதும் பழைய ஓர் கல்வீடும் அமைந்த 07 பரப்பு 33 குழி எனும் ஆதனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய இல. : 0774150799 (3885)


## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1940 - 04 - 28 — இறப்பு 2013 - 09 - 05

### நூர்ஷாகான் - பபீ

எமது பாடசாலையின் சக ஊழியராக கடமையாற்றும் பரிஷானா

அவர்களின் அன்பு உம்மம்மா நூர்ஷாகான் - பபீ அவர்கள் 2013-09-05 அன்று காலமாகி விட்டார். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல் : மு. முத்தையன்கட்டு, இடது கரை, அ. த.க. பாடசாலை சமூகம்.

(3899)


## துருக்கி வேலை அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்

(துருக்கி ஐரோப்பிய யூனியனில் உள்ள ஓர் நாடு)

* ஆண், பெண் இருபாலாருக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

### WORK PERMIT VISA

* புதுப்பித்துக் கொள்ளக்கூடிய இரண்டு வருட வேலை ஒப்பந்தம்
* மாதாந்த சம்பளம் 690 Euro *(690 x 180 = 124,200/=)*

**வேலை: பொதி செய்தல் (Packing Section)**

* மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்

(வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து சட்டரீதியான பயணம்)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**முன்பதிவுகளுக்கு மட்டும் : 0214921831, 0214921832**

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்,

இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (3378)

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிதபால்கள் பொதிகள் DHL சேவை திருமுருகன் கொம் நெற்

## விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள் CD, VCDகள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.

11 kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்.

தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில்.

திருமுருகன் கொம் நெற் தற்பொழுது எமது பழைய இடத்தில் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

**விசேட சலுகை!** 10-30 வீதம் வரையான விலைக்கழிவு!!

DHL EXPRESS TCN Express (சி-4662)

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835 (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)

இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6




நாளை (09.09.2013) திங்கட்கிழமை சுழிபுரம் - பறாளாய்

## ஈசுர விநாயகரின் பாற்காவடித் தினம்

பிற்பகல் 2 மணியளவில் சதுர்த்தி அபிஷேகம்,

பூஜை வழிபாடுகள் நடைபெறும்.

சோழியூரான் - பிறைசூடிக்குரு

(3890)

## ஜப்பான் நிதியுதவியுடன் கிளி.யில் 2 முன்பள்ளிகள்

இரண்டு முன்பள்ளிகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஜப்பானின் உதவியுடன் கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஹபிட்டட் உதவி திட்டத்தின் ஊடாக ஜப்பான் அரசாங்கம் வழங்கிய நான்கு மில்லியன் அமெரிக்க டொலர் உதவியின் ஒரு பகுதி இந்த முன்பள்ளிகளை நிர்மாணிக்க பயன்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை சமுதாய அமைப்புக்களின் பங்குபற்றலுடன் யு.என்.ஹபிடட் நிறுவனம் செயற்படுத்தும். இதேவேளை வட மாகாணத்தில் மர நடுகை பிரசார நிகழ்வினையும் யு.என் ஹபிட்டட் நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

நாளைக்காக மரங்கள் எனும் திட்டத்தின் கீழ் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர் எஸ்.முகுந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். அடுத்த இரண்டு வருடங்களுக்குள் 2 இலட்சம் மரங்களை இந்த செயற்றிட்டத்தின் மூலம் நடுவதற்கு யு.என். ஹபிட்டட் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்



எமது போராட்டத்தில்
இதுவரை இழந்த இழப்புகளை
அர்த்தமுள்ள உரிமை
அரசியலாக்க வாக்களியுங்கள்

5 ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5

(E-019)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
வடமாகாண சபைத் தேர்தல் 2013



X 4

எனது வெற்றி
உங்கள் வெற்றி..!
உங்கள் வெற்றி, உங்கள் சந்ததியின் வெற்றி
நம்பிக்கைக்குரிய தெரிவு
அண்ணன்
சிராஸ்

உங்கள் குரல்! எனது செயல்...!
www.voiceofseeras.com

(EC/4981)



வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்

இனமானம் காப்போம்
ஈனத்தவரை விரட்டுவோம்
இழந்தவற்றை மீட்போம்
இருப்பவற்றைக் காப்போம்
அடக்குமுறையை உடைப்போம்
அராஜகத்தை ஒழிப்போம்
ஒன்றாய் நிற்போம்
வென்றே தீருவோம்
உணர்வுள்ள தமிழரின் தெரிவு..



(E-031)

கார்த்திகேசு நடராசா
விந்தன் கனகரத்தினம் -MMC
(யாழ்.மாநகரசபை உறுப்பினர்)
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு- TNA)

12

இலங்கை தமிழ் அரசுக் கட்சி X



மாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்



X



தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

பாலச்சந்திரன் கஜதீபன்
(ஆசிரியர், தலைவர் - இளைஞர் அணி)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(CE/4934) (EC/4982)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# சிங்கள-தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் யாழ்தேவி யாழ்ப்பாணத்திற்கு வரும்

(கிளிநொச்சி)

சிங்கள-தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் ஆறரை மணித்தியாலங்களில் யாழ்தேவி ரயில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணிக்கும். கிளிநொச்சிக்கும் யாழ்ப் பாணத்திற்கும் இடையிலான புகையிரதப் பாதை நிர்மாணப் பணிகள் 65 வீதம் நிறை வடைந்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் இருந்து கிளிநொச்சி வரை யிலான புகையிரதப் பாதை எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

25 வருடங்களுக்குப் பின்னர் 15 ஆம் திகதி முதல் கொழும்பில் இருந்து கிளிநொச்சி வரை மூன்று புகையிரதச் சேவைகள் ஆரம் பிக்கப்படவுள்ளன.

ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரையி லான 65 கிலோ மீற்றர் தூர ரயில் பாதை நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அநுராதபுரத்திலிருந்து கிளிநொச்சி வரை விசேட புகையிரதத்தில் நேற்றுமுன்தினம் பயணம் செய்த அமைச்சர் ஓமந்தை மற்றும் கிளிநொச்சி புகையிரத நிலையங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவ,ர் இந்திய இர்கொன் நிறுவனத்தினால் வடபகுதிக்கான 25 கிலோ மீற்றர் நீளமான புகையிரதப் பாதையின் மீள் நிர்மாணப் பணி கள்,சமிக்ஞை விளக்கு, வலைப் பின்னல்கள் என்பன துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத் தில் யாழ்ப்பாணம் வரையான புகையிரதப் பாதைப் பணிகள் பூர்த்தி செய்யப்படும். ஜூலை மாதத்தில் யாழ்தேவி புகையிரதம் காங்கேசன் துறை வரை பயணம் செய்யும். மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யும் வகையில் புகையிரதப் பாதைகள் நிர்மாணிக் கப்பட்டு வருகின்றன.

புகையிரதச் சேவை மீண்டும் முழுமையாக ஆரம்பிக்கப்படுவதன் மூலம் பேருந்தில் பய ணிக்கும் நேரத்தைவிட நான்கு முதல் ஐந்து மணி நேரம் பயண நேரம் குறைவடையும். வவுனியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சகல புகையிரத நிலையங் களும் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறு வனங்களின் உதவியுடன் மீள அமைக்கப் பட்டு வருகின்றன.

ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடை யிலான புளியங்குளம், மாங்குளம், முறி கண்டி புகையிரத நிலையங்களும் மீள ஸ்தா பிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி புகையிரத நிலையம் கொமர்ஷல் வங்கியின் நிதியுதவி யில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மடுவிலிருந்து தலைமன்னார் வரை யிலான புகையிரத நிர்மாணப் பணிகள் நிறை வடைந்து வருவதோடு, இந்த வருட இறுதியில் புகையிரதச் சேவைகள் மீள ஆரம்பிக்கப் படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித் தார். (அ-2)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி– சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள ஒரு இலட்சத்து 32 ஆயிரம் வோல்ட் அதியுயர் அழுத்த மின்மார்க்கத்தின் ஊடாக மின்விநியோக இணைப்பு மீள் ஒழுங்குபடுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் இன்று ஞாயிற்றுக்கிழமை 8.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை கரந்தன்,ஆடியபாதம் வீதி, கொக்குவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலி , கல்வியங்காடு, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை ,தெல்லிப்பழை, மாவிட்டபுரம், அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய், கோண்டாவில், பட்டணப்பகுதி, யாழ் மாநகர சபைப்பகுதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ். பிரதான வீதி, பண்ணைப்பகுதி, காந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், மாதகல், இளவாலை, சங்கானை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், அச்சுவேலி, வாதரவத்தை, வீரவாணி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (அ-5)

# சஞ்சிகை வெளியீடும் மாணவர் வரவேற்பும்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி முதுமாணி மாணவர்களின் "வித்தகம்" சஞ்சிகை வெளி யீடும் புதிய மாணவர்களின் வரவேற்பு நிகழ் வும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

நிறுவக இணைப்பாளர் எஸ்.கே. யோக நாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நிறுவகப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பி.ஜப்வர், சிறப்பு விருந்தினராக நிறுவக பணிப்பாளர் திருமதி குமாரி ரணசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வுக்கான வாழ்த்துரைகளை பேரா சிரியர் மா.சின்னத்தம்பி, பீடாதிபதி எஸ்.அமிர் தலிங்கம், உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந் திரம்பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளதுடன் நூலின் வெளியீட்டுரையை கலாநிதி த.கலா மணி, ஆய்வுரையை கலாநிதி அனுசியா சத்தியசீலன் ஆகியோரும் வழங்கவுள்ள னர்.

"வித்தகம்" சஞ்சிகையின் முதற் பிரதியை விரிவுரையாளர் எஸ்.குணசீலன் பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ-5)

# வாரம் ஒரு தகவல்

## கோபத்தில் வெளிப்பட்ட அன்பு

சகோதரர்களான இரு சிறுவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மனக் கசப்பில் அவ் இரு சிறுவர்களும் தமக்குள் பேசிக் கொள்வதை நிறுத்திக் கொண்டார்கள்.

இவ் இரு சகோதரர்களும் இவ்வாறு பேசிக் கொள்ளாமல் இருப்பதை உணர்ந்த அவர்களின் தாய் மிகவும் மன வேதனையடைந்தார்.

இவ்வாறு மன வருத்தப்பட்ட அவர்களது தாய்தான் அன்னை பாத்திமா.

எனவே இவ் இரு சகோதரர்களையும் எவ்வாறு பேச வைப்பது என சிந்தித்த அன்னை பாத்திமா இவ் இரு சிறுவர்களையும் அழைத்து ஒன் றாக உட்கார வைத்தார்.

பின்னர் அவர்களின் பாட்டனாரான நபிகள் நாயகத்தின் பொன் மொழிகளில் ஒன்றை அவர்களுக்கு கூறினார்.

அது என்னவெனில் "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுடன் மூன்று நாட்களுக்கு மேல் பேசாமல் இருந்தால் அது அவனை கொலை செய் வதற்கு ஒப்பாகும்" என்பதாகும்.

இவற்றை அன்னை பாத்திமா கூறுகையில் அவ் இரு சகோதரர்களும் ஆர்வமாக அதை செவிமடுத்தார்கள்.

தாயார் இவற்றைக் கூறி முடித்ததும் அங்கிருந்த இளைய சகோதரன் தாயை நோக்கி "அம்மா... இப்படிப் பேசாமல் இருக்கும் இருவரில் எவர் முதலில் சலாம் செய்கிறாரோ, அவருக்கே அதிபலன் உண்டு... என்றும் அண்ணல் நபி அவர்கள் கூறியிருப்பது எனக்கு தெரியும்... அதனா லேயே அந்தப் பலன் அண்ணனுக்கு கிடைக்கட்டும் என்னும் எண்ணத் திலே தான் நான் முதலில் பேசாமல் இருந்தேன்!" என்று கூறினான்.

இதைக் கேட்டதும் மூத்த சகோதரர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்க உடனே தம்பியைப்பார்த்து "சலாம்" சொல்லிகட்டிஅணைத்துக் கொண்டார்.

தம்முடைய பிள்ளைகளின் அறிவையும் அரிய பண்பையும் பார்த்து அன்னை பாத்திமா மெய் மறந்து நின்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

08.09.2013
(ஆவணி 23, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திருதியை பிற்பகல் 5.10 மணிவரை
அத்தம் முற்பகல் 9.46 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
நான்காம் ஆவணி ஞாயிறு.
அமிர்தசித்தம்

**மேடம்** சுவாரஸ்யமான நாள், உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், போசன சுகமுண்டு.

**இடபம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** பொதுக் காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், ரோக பயமுண்டு.

**கடகம்** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், நேற்றைய பிரச்சினைகள் இன்று நல்ல முடிவுக்கு வரும், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிங்கம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, சான்றோர் சந்திப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் நன்மையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தையுண்டு, ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும்.

**துலாம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள், மனச்சஞ்சலங்கள் கூடும், நண்பர்களிடம் பழகும் போது கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை.

**விருச்சிகம்** சகோதர ஒற்றுமை பலப்படும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நண்பர்கள் சந்திப்புண்டு.

**தனுசு** வரம் தரும் தேவிகளை வழிபடச் செல்ல வேண்டிய நாள், புதிய திட்டங்கள் கைகூடும், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்து வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, கட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

**கும்பம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

**மீனம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, கௌரவமான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 50 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 45 | 60 | 80 |
| கரட் | 40 | 80 | 120 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 20 | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-140 | 140-180 |
| பெரிய வெங்காயம் | 110 | 90 | 140 |
| பாகற்காய் | 40 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 90 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 50 | 100 |
| பீற்றூட் | 10 | 20 | 40 |
| கறிமிளகாய் | 50 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 80 | 120 |
| போஞ்சி | 100 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 30 |
| தேசிக்காய் | 350 | 400 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 60 | 80 | 100 |

# தமிழ் மக்களின் இருப்பை நிலைநாட்டுகின்ற தேர்தல்

## த.தே.கூட்டமைப்பு வேட்பாளர் வ.கமலேஸ்வரன்



எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் வடபகுதி தமிழ் மக்களின் எதிர்கால சுதந்திர மான இருப்பை நிலைநாட்டு கின்ற அதிமுக்கியம் வாய்ந்த தேர்தல் என்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

இத்தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் கீழ் தமி ழரசுக் கட்சியின் சார்பில் நான் போட்டியிடுகின்றேன். நான் முல்லைத்தீவு மாவட்ட தமிழரசுக் கட்சிக் கிளையின் தலைவராகவும் உள்ளேன்.

நான் அரச சேவையில் பெருந்தெருக்கள் திணைக் களத்தில் தொழில் நுட்ப உத்தி யோகத்தில் இருந்து ஓய்வூதி யராகியுள்ளேன்.

பொதுச் சேவையில் குறிப் பாக கூட்டுறவுச் சேவையில் 1978 ஆம் ஆண்டு முதல் துணுக்காய் ப.நோ.கூட்டுற வுச் சங்க இயக்குநராகவும் தலைவராகவும் பல ஆண்டு காலம் சேவையாற்றி இலாப த்தில் இயங்கும் சங்கத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் உருவாக்கினேன்.

தேசியமட்டத்தில் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை யிலும் இலங்கை கூட்டுறவு நுகர்ச்சி ஒன்றியத்தின் வடமாகாண இயக்குநராக தொடர்ந்தும் சேவையாற்றி வருகின் றேன்.

1961 ஆம் ஆண்டு யாழ். கச்சேரி சத்தியாகிரகத்தில் மாண வனாக பங்குபற்றிய நான் தந்தை செல்வாவின் தலை மையை ஏற்று தொடர்ந்து தமிழர் விடுதலை கூட்டணி துணுக்காய் மாங்குள பிரதேச அமைப்பாளராகவும் 1977 ஆம் ஆண்டு முல்லைத்தீவு தொகுதி பாராளுமன்ற தேர்த லில் எக்ஸ். எம். செல்லத்த ம்புவின் வெற்றிக்காக அரும் பாடுபட்டேன்.

இவ்விதமான சேவைக ளையும் அனுபவங்களையும் கொண்ட வேட்பாளராகிய வல் லிபுரம் கமலேஸ்வரன் ஆகிய என்னை முல்லைத்தீவு மாவட் டத்தின் மாகாண சபை உறுப் பினராக அதிகூடிய வாக்குக ளால் வெல்ல வைக்க இலக் கம் 7 இற்கும் வீட்டுச் சின்னத்திற் கும் புள்ளடி இட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். (அ)

# அரசின் பங்காளிகளான நாம் உரிமைகளை வென்றெடுப்போம்

## ஈ.பி.டி.பி.வேட்பாளர் கமல்



துயர் சுமந்த தமிழ் மக்க ளின் வாழ்வில் புது வசந்தம் பிறந்திட வழியேற்பட்டுள்ளது. எமக்கான அரசியல் உரிமை களைப் பெற்று எமது தேச த்தில் தமிழ் மக்கள் தலைநிமி ர்ந்து வாழவும், மீள் எழுச்சி பெறவும் மீண்டுமொரு சந்த ர்ப்பம் எம் வாசல் தேடி வந்து ள்ளது என ஐ.ம.சு. முன்ன ணியில் ஈ.பி.டி.பி.கட்சியின் சார்பில் வடக்கு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் கம லேந்திரன் (கமல்) அறிக்கை வெளியிட்டுள்ளார்.

1987 இல் உருவான இல ங்கை- இந்திய ஒப்பந்தம் பெற்றுத்தந்த வடகிழக்கு இணை ந்த மாகாண சபை முறைமை தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரி மையைப் பெற்றுத் தரவிருந்த பொன்னான வாய்ப்பாகும்.

ஆனால் இதனை நிராகரி த்ததன் விளைவையே கடந்த காலங்களில் நாம் கற்றறிந்த பாடங்களாகபட்டறிந்துள்ளோம்.

காலப் பெருவெளியில் திக்கற்று-நாதியற்றவர்களாய்- வலி சுமந்து வாழ்ந்து கொண்டி ருந்த தமிழ் மக்களின் வாழ் வில் சுபீட்சம் நிலவுகின்ற நிலை யில் அழிவடைந்த எமது தேச த்தை மீளக்கட்டியெழுப்பி வரு கின்றோம். அவ்வாறே எமக் கான அரசியல் உரிமைகளைப் பெற்றிட வட மாகாண சபைத் தேர்தல் ஓர் சந்தர்ப் பமாகும்.

வலி சுமந்த எம்தேசத்தில் அக்கினிப் பிரசவமாய் பெற் றெடுத்த இயல்புச் சூழலைப் பாதுகாப்பதற்கும் எமது மக்க ளுக்கான வாழ்வுரிமைகளைப் பெற்றெடுக்கவும் எமது மக்க ளின் அரசியல் உரிமை களை வென்றெடுக்கவுமே நடைமு றைச் சாத்தியமான வழியில் நாம் தொடர்ந்தும் செயற்ப ட்டு வருகின்றோம்.

எமது இணக்க அரசிய லின் மூலமே தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக் கும் அவர்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடிந்தது. சாத்தியமான நடை முறையில் தளராத நம்பி க்கை கொண்டு எமது மக்க ளின் அரசியல் உரிமையை வென்றெடுக்கும் எமது தலை வரின் தலைமையில் ஓர்ஒளி மயமான எதிர்காலத்தைப் பெற்றெடுக்க முடியும்.

**மத்தியில் கூட்டாட்சி மாநி லத்தில் சுயாட்சி** என்பது எமது கட்சியின் தாரக மந்தி ரமாகும். அவ்வாறே 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது எமது தலைமையின் நீண்ட கால எண்ணக் கனவாகும். 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் மாகாண சபைக்குரிய ஒரு உறுதியான அதிகாரப்பகிர்வு கிடைப்பதுடன் அதில் சிலகுறை பாடுகள் காணப்படினும் வட மாகாணசபை மக்கள் ஆணை யின் மூலம் எமக்கு கிடைக்கி ன்ற போது அக்குறைபாடுக ளும் எம்மால் நிவர்த்தி செய் யப்படும்.

இதனுடன் 13 ஆவது சட்டத் திருத்தத்திற்கு அப்பாலும் எமது உரிமைகளை, அதிகா ரங்களை மென்மேலும் உறு திப்படுத்திக் கொள்ள முடியும். எமது தலைமை யின் இண க்க அரசியலால் மட்டுமே இது சாத்தியமாகும்.

வடக்கில் மீள்குடியேற்ற த்தை சாத்தியமாக்கி தமிழ் மக்களின் வாழ்வில் ஒளி யேற்றி வடக்கின் வசந்தம் வீசச்செய்த வரலாற்றுச் சாதனை எமது கட்சியின் செய லாளர் நாயகமும் அமைச்சரு மான டக்ளஸ் தேவானந்தா வின் நடைமுறைச் சாத்திய மான செயற்பாடுகளினா லேயே நிகழ்ந்தேறியுள்ளது.

இலங்கையில் என்றுமில் லாத பெரும்பான்மை பெற்ற, பலம் பொருந்திய அரசின் பங்காளிகளான நாம் எமது மக்களுக்கான உரிமை களை நிச்சயம் வென்றெடுப்போம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது தலைமையின் கீழ் ஓரணி திரண்டு மக்கள் ஆத ரவளிப்பதன் மூலம் இத னைச் சாத்தியமாக்க முடியும். ஒருமித்த மக்கள் ஆதரவின் மூலம் வடக்கில் எமது உரி மையை நிலை நாட்டுவோம். ஒன்றுபடுங்கள் வெற்றிபெறு வோம். சொல்வதைச் செய் வோம் செய்வதைச் சொல் வோம். (அ)






# வைரவர் ஆலய மண்டபத்தினுள் மாமிச உணவு உண்கின்றனர்

750 வழித்தட வீதி அகலிப்பு பணியில் ஈடு படும் பணியாளர்கள், குஞ்சர் கடைக்கு அருகாமையிலுள்ள வைரவர் ஆலய மண்டபத்தில் மாமிச உணவுகளை வைத்து உண்பதாக அப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீதி அகலிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்ற அறுபதிற்கும் மேற்பட்ட பணியாளர்கள் கோயில் மண்டபத்தில் உணவுகளை வைத்து உண்பதால் மண்டபம் அசுத்தமாக்கப் படுவதுடன் மாமிச உணவுகளையும் இங்கு வைத்து உண்ணுகின்றனர்.


இச் செயல் இந்து ஆலய விதிமுறைகளுக்கு மாறானதாகும்.

இவ்வாறான விடங்களை மேற்கொள்ள வேண்டாமென ஆலய குருக்கள் பலமுறை அறிவுறுத்தியும் பணியாளர்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை.

அத்துடன் இவர்களின் இச் செயற்பாட்டினால் ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்களும் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

எனவே உரியவர்கள் இந்நடவடிக்கையைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டுமென ஆலய நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-9-60)




# மக்களுக்கு சொந்தமான ஒரு அங்குலம் காணியைக்கூட நாம் சுவீகரிக்கவில்லை

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆயுதமேந்தி போராடியவர்களுக்கு அடிபணியப் போவதுமில்லை. அவர்கள் கேட்ட அதிகாரங்களை வழங்கப் போவதுமில்லை. இந்திய அமைதிப்படை தமிழ் மக்களிடம் பறித்த காணிகளைத்தான் நாங்கள் பிடித்து வைத்துள்ளோம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.**

கொக்குவில் ராஜா கிறீம் ஹவுஸில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


வடக்கு மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தரப்பட்ட தேர்தல்தான் வடமாகாண சபைத் தேர்தலாகும்.

வட மாகாண மக்களுக்கு சேவை புரிவோர் இத் தேர்தலில் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஆனால் இங்குள்ளவர்கள் வடக்கு மக்களுக்கு ஒன்றும் செய்யாது தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடபகுதி மக்கள் தங்களுடைய தலைமையைத் தாங்களே தெரிவு செய்வதற்குரிய சந்தர்ப்பதை வழங்கியுள்ளார்.

தமிழ் மக்களிற்குரிய அதிகாரத்தை ஜனாதிபதி வழங்கும் போது, கொழும்பிலுள்ளவர்களுக்கும் வெளிநாட்டிலுள்ளவர்களுக்கும் அதிகாரங்களை வழங்குவது ஏற்புடையதன்று.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் கொழும்பில் வசித்து வந்துள்ளார்.



அந்தவகையில் நான்கூட கடந்த காலத்தில் 5 தடவைகள் வடக்கிற்கு வருகை தந்துள்ளேன். அவ்வாறானால் நானும் முதன்மை வேட்பாளராக வருவதற்கு வடக்கில் போட்டியிடலாம்.

ஆயுதமேந்தி போராடியவர்களிற்கு அதிகாரங்களை வழங்கப் போவதில்லை. அவர்களிற்கு அடிபணியவும் போவதில்லை.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு இங்கு எத்தனை தீவுகள் உள்ளன? அவை எங்குள்ளன? என்ற விடயங்கள் கூடத் தெரியாது.

கூட்டமைப்பு தற்போது பெரிதாக பேசும் விடயம் இராணுவத்தின் காணி சுவீகரிப்பு பற்றியதாகும். இந்திய அமைதிப்படையின் காலத்தில் பறித்து வைத்திருந்த காணிகளைத் தான் நாம் வைத்திருந்து அவற்றை மக்களுக்கு வழங்கி வருகின்றோம். ஒரு சில இடங்களில் விமானப்படைக்கும் அபிவிருத்தி திட்டங்களை மேற் கொள்வதற்கும் கொடுப்பனவுகளுடன் காணிகளையும் சுவீகரித்து வருகின்றோம்.

மற்றும்படி மக்களிற்கு சொந்தமான ஒரு அங்குலம் அளவு காணியைக்கூட நாம் சுவீகரிக்கவில்லை.

5 ஆயிரம் இளைஞர்களை பொலிஸ் திணைக்களங்களில் இணைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ளார்.

இதனைவிட இளைஞர்,யுவுதிகளையும் அரச படைகளில் இணைத்துள்ளோம். வட மாகாண சபையில் மட்டும் கடந்த வருடம் 8 ஆயிரம் பேருக்குவேலை வாய்ப்பை வழங்கியுள்ளோம்.

இதுதவிர சமுர்த்தி திட்டத்தில் ஆயிரத்து 800 பேர் உள்வாங்கப்பட்டு உள்ளனர்.

தற்போது வடக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் என எவரும் இருக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் கேட்க விரும்புவது என்னவென்றால் நாம் மக்களுக்கு பலவற்றையும் செய்து வருகின்றோம். ஏன் அவற்றை மக்களிற்கு கூற மறுக்கின்றீர்கள்?

வடக்கு மாகாண மக்கள் நன்றியுடையவர்கள். சமாதானமாக வாழ விரும்புபவர்கள். கல்வியை விரும்புபவர்கள்.

இதனை நிரூபிப்பதற்கு ஜனாதிபதியே சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளார். துப்பாக்கி வேட்டுச் சத்தம், விமானத் தாக்குதல் என்பன அற்ற முறையில் சமாதானம் தொடர வேண்டுமாயின் எதிர்வரும் 21 ஆம் திகதி மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இச் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட அமைப்பாளரும் வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-4)

# வாகனத்திற்கு தீ மூட்டியமை குறித்து விசாரணைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றை தீ மூட்டி எரித்த சம்பவம் தொடர்பில் புலனாய்வு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி அல்வாய் வியாபாரி மூலையில், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றை இனம் தெரியாதவர்கள் தீ மூட்டி எரித்து விட்டு தலைமறைவாகியிருந்தனர்.

இதில் வாகனத்திற்கு 23 இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது என பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில் புலனாய்வு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-4)

# குடமியன் கட்டைபறிப்பு வீதியை புனரமைக்குக

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட குடமியன் கட்டை பறிப்பு வீதி, 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லையென, அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதியை, குடம்மியன் நாவற்காடு, மிருசுவில் வடக்கு, கொடிகாமம் ஆகிய பிரதேச மக்கள் பிரதானமாக பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதிப் பகுதிகளில் மணல் அதிகமாகவுள்ளதால், கொடிகாமம் சந்தைக்கு தமது உற்பத்திகளை எடுத்துச்செல்லும் விவசாயிகள் உட்பட பயணிகள் அனைவரும் பல அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே,சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியைப் புனரமைக்க ஆவன செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-29)

# மஹிந்த சிந்தனையை மாற்றியமைக்க வேண்டும்

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

மந்தபுத்தி சிந்தனை காரணமாக நாடு நாளுக்கு நாள் அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக்கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், உலகில் தோல்வியடைந்த 30 நாடுகளின் பட்டியலில் தற்பொழுது இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மஹிந்த சிந்தனை என்ற மந்த புத்தி சிந்தனையை மாற்றியமைக்க வேண்டிய காலம் வந்துள்ளது.

நாட்டில் உள்ள ஒரு சிறிய தரப்பினர் சுகபோகமாக வாழ அமர்த்தப்பட்டுள்ள இந்த அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து வீழ்த்த வேண்டும். ஐந்து தலைமுறைகளாலும் திருப்பிச் செலுத்த முடியாத கடன் சுமையை அரசாங்கம் நாட்டின் மீது சுமத்தியுள்ளது.

ஜனாதிபதி உட்பட 300 தொடக்கம் 400 பேரின் சுகவாழ்வுக்காக இந்தக் கடன் சுமை நாட்டின் மீது ஏற்றப்பட்டுள்ளது. மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக அரசாங்கம் வெளிநாடுகளில் கடனுதவிகளை ஆட்சியாளர்கள் பெறவில்லை. கடன்களைப் பெற்று சுகபோகமாக வாழும் போது நாட்டமக்கள் ஒருநாளில் இரண்டுவேளை மாத்திரமே உணவை உட்கொள்கின்றனர்.

மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சியாளர்கள் இன்று நாட்டில் இல்லை. தம்மையும் தமது உறவுகள் பற்றி சிந்திப்பதும் எப்படிப் பணத்தைத் திரட்டுவது என்றும் சிந்திக்கும் ஆட்சியாளர்களே உள்ளனர் என்றார். (அ-2)

# இஸ்ரேல் புலனாய்வாளர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

அலரி மாளிகைக்குள் செல்ல முயற்சித்த இஸ்ரேல் புலனாய்வாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் பிரஜையான புலனாய்வாளர் ஒருவர் கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்று வட்டத்தின் வழியாக இரகசியமான முறையில் அலரி மாளிகைக்குள் பிரவேசிக்க முயற்சித்து தப்பிச் செல்லும் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் சந்தேகநபரான இஸ்ரேலிய பிரஜையை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது அங்கிருந்து அவர் தப்பிச் சென்றுள்ளார்.

இதுபற்றி கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரும் பொலிஸாரும் சந்தேகநபரைப் பின்தொடர்ந்து கொள்ளுப்பிட்டி நகருக்கு அருகில் வைத்து அவரைக் கைது செய்துள்ளனர்.

இந்திய வம்சாவளியான இந்த இஸ்ரேல் பிரஜை சில தினங்களுக்கு முன்னரே இலங்கைக்கு வந்துள்ளார். தான் சிகையலங்காரம் செய்யும் இடம் ஒன்றைத் தேடி தவறுதலாக அலரிமாளிகை இருக்கும் இடத்திற்குச் சென்றுவிட்டதாக சந்தேகநபர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் வெளியிட்டுள்ள தகவல்களின்படி அவர் ஒரு புலனாய்வாளர் என சந்தேகிப்பதாகவும் அவர் புலனாய்வு தகவல்களை சேகரிக்க அலரி மாளிகைப் பகுதிக்கு சென்றிருக்கலாம் எனவும் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் பற்றிய மேலதிக தகவல்களை கண்டறிவதற்காக அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-2)

# 2014 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சூளுரை

அரசாங்கம்இளையசமூகத்தினரைகொலை செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 67 ஆவது வருடப்பூர்த்தி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எமது கட்சியின் 67 ஆவது வருடப் பூர்த்தி விழா நாம் எதிர்க்கட்சியாக இருக்கும் இத்தருணத்தில் கொண்டாடப்படுகிறது.

ஆனால் 68ஆவது வருடப்பூர்த்தி விழா ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின்கீழ் கொண்டாடப்படும் என்று கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக ஆட்சியமைக்கும் என்று குறிப்பிட்டார்.

அரசாங்கம் இளைய சமூகத்தினரைக் கொலை செய்து வருவதாக உறுதிபடக்கூறிய அவர் குற்றம் சுமத்தியுள்ளார். கட்டுநாயக்க வெலிவேரிய சம்பவங்களில் இளைஞர்கள் கொல்லப்பட்டமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இதன்காரணமாக இளைஞர்களின் உயிர்களுக்கு இந்த அரசாங்கத்தினால் ஆபத்து ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்களுக்கான இணையம் தொடர்பான கல்வியை ஐக்கிய தேசியக் கட்சியே வழங்கியது. இந்நிலையில் இளைஞர் நட்புடைய நாடு ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இளைஞர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை இந்த வருட இறுதிக்குள் பொதுத்தேர்தலை நடத்தக்கோரி தமது கட்சி போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# பிரபாகரனின் கொள்கைகளே த.தே.கூட்டமைப்பின் அறிக்கை

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்தேர்தல் அறிக்கை, காணி, பொலிஸ், கல்வி, சமூக, பொருளாதார அதிகாரங்களைக் கோருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். இவை அனைத்தும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கோரிக்கைகள்.இவையெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாதத்தை ஆதரிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உதவியுடன் கிழக்கில் ஆட்சியைக் கைப்பற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரனால்செய்ய முடியாது போனவற்றை இப்போதுள்ள தமிழ்த்தலைவர்களால் செய்து விடமுடியாது என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில், வடக்கு, கிழக்கு இணைந்த தன்னாட்சி அதிகாரம் கொண்ட அலகை உருவாக்குவது குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாகவே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் நாட்டைப் பிரிக்க ஒருபோதும் நான் அனுமதிக்கமாட்டேன் என்றும் கூறியுள்ளார். (அ-2)

# புள்ளிவிபரவியலாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்கள தலைமைக் காரியாலய உயர் அதிகாரிகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வட மாகாணத்தில் சகல மாவட்ட புள்ளி விபரவியலாளர்கள், புள்ளி விபர உத்தியோகத்தர்கள், புள்ளி விபர உதவியாளர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பொருளாதார தொகை மதிப்பு 2013/ 2014 இற்கான கைத்தொழில், நிர்மாணம், வர்த்தகம் மற்றும் சேவைகளை நிரற்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கிறீன்கிறாஸ் உணவக விடுதியில் நடைபெறவுள்ளது. (அ-5)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்

கலவரங்களால் இடம்பெயர்ந்த
மலையக மக்களை
நிரந்தரமாக குடியேற்ற
காரணமாக இருந்த.....
வீ.ஆனந்தசங்கரி
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)
X 2
EC-4951


மாகாணசபைத் தேர்தல் 2013 யாழ் மாவட்டம்

தடைகளைத் தாண்டி
உரிமைகளை வென்றிட
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
சுரேஷ் பிரேமச்சந்திரனின் தெரிவு
அரசியல் விஞ்ஞான கலாநிதி
க.சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
(EC/4984)
இலங்கைத் தமிழரசுக்கட்சி
X 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வட மாகாண சபைத் தேர்தல் – 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்

சீ.வீ.கே.சிவஞானம்
பட்டயச் செயலாளர்
ஓய்வுநிலை மாநகர ஆணையாளர்
துணைப் பொதுச்செயலாளர் - இ.த.அ.க
X 8
(E/009)
சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!




# ஆமையின் அறிவுக் கூர்மை



ஆரவல்லி மலைக்காட்டில் குளம் ஒன்று இருந்தது. அதில், ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த ஆமை குளக்கரையில் நடந்து கொண்டிருந்தது. அதன் எதிரில் பெண் புலி ஒன்று வந்தது. "பெண்புலியே! வணக்கம்! என்றது ஆமை. பதிலுக்கு அந்தப்புலி வணக்கம் சொல்லவில்லை. அதன் வணக்கத்தை ஏற்றுக்கொள்வது போலத் தலையை அசைத்தது. நான் வணக்கம் சொன்னேன். "நீ வணக்கம் சொல்லாமல் தலையை அசைக்கிறாயே" என்று கோபத்துடன் கேட்டது ஆமை.

"இந்தக் காட்டில் நானும், என் கணவரும் வலிமையானவர்கள். எங்களுக்கு அஞ்சி நீங்கள் வணக்கம் சொல்கிறீர்கள். நாங்கள் யாருக்கும் வணக்கம் சொல்ல வேண்டியது இல்லை" என்று ஆணவத்துடன் சொன்னது பெண்புலி. இதைக் கேட்டு எரிச்சல் அடைந்தது ஆமை, "உனக்கு வலிமை அதிகமா? உன் கணவருக்கு வலிமை அதிகமா?" என்று கேட்டது. "என் கணவருக்குத்தான் வலிமை அதிகம்" என்றது பெண் புலி. "உன் கணவரின் முதுகில் நான் சவாரி செய்து காட்டுகிறேன். அவர் குதிரைபோல என்னைச் சுமந்து வருவார். இதை நீ பார்க்கத்தான் போகிறாய். அதன் பிறகு உன் ஆணவம் அடங்கும். எல்லோருக்கும் வணக்கம் செலுத்துவாய் என்றது" ஆமை. கோபத்துடன் தன் கணவரிடம் வந்தது பெண் புலி.

"அந்த ஆமை உங்கள் மேல் குதிரை போலச் சவாரி செய்யப்போகிறதாம். என்ன திமிர் இருந்தால், அது என்னிடமே சொல்லும். நீங்கள் அதற்குத் தண்டனை தரவேண்டும். அப்போதுதான் என் உள்ளம் அமைதி அடையும்" என்றது. "அப்படியா அந்த ஆமை சொன்னது? அதை இங்கே இழுத்துவந்து உன்னிடம் மன்னிப்பு கேட்கவைக்கிறேன். வர மறுத்தால், அது உயிருடன் இருக்காது" என்று கோபத்துடன் உறுமியது ஆண்புலி. அங்கிருந்து புறப்பட்ட புலி, ஆமையைத் தேடி அலைந்தது. குளக்கரையில் ஆமையைப் பார்த்தது.

"நீ என்மேல குதிரைபோலச் சவாரி செய்வதாகச் சொன்னாயா?" என்று கோபத்துடன் கேட்டது. "புலியாரே! உம்மை பற்றி நான் அப்படிச் சொல்வேனா? யாரோ உம்மிடம் பொய் சொல்லி இருக்கின்றனர்" என்று நடுங்கியபடி சொன்னது.

## பஞ்சதந்திரக் கதைகள்

"வேறு யாராவது சொல்லி இருந்தால், நம்பி இருக்க மாட்டேன். என் மனைவிதான் அப்படிச் சொன்னாள். என் முன் பேசுவதற்கே நடுங்குகிறாய்... உன்னைப் பார்க்கப் பரிதாபமாக உள்ளது. நீ என் மனைவியிடம் வந்து அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லி மன்னிப்புக்கேள். உன்னை உயிருடன் விடுகிறேன். இல்லையேல் இங்கேயே கொன்று விடுவேன்" என்று உறுமியது புலி.

"நான் எங்கே வேண்டுமானாலும் வந்து அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறேன். ஆனால், இப்போது என்னால் வரமுடியாது. இன்னொரு நாள் வந்து சொல்கிறேன்!" என்றது ஆமை. இப்போது உன்னால் வரமுடியாதா? ஏன்? என்று புலி உறுமியது. எனக்குக் காய்ச்சல் அடிக்கிறது. உடம்பு நெருப்புப்போல சுடுகிறது. இந்தநிலையில் என்னால் இரண்டடி தொலைவு கூட நடக்க முடியாது. காய்ச்சல் சரியானதும், நானே உங்கள் மனைவியிடம் வருகிறேன். நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறேன். இப்போது என்னை வற்புறுத்தாதீர் என்று கெஞ்சியது" ஆமை.

"உன்னால் நடக்கத்தானே முடியாது. என் முதுகில் அமர்ந்து கொள். உன்னை என் மனைவியிடம் தூக்கிச் செல்கிறேன். அவளிடம் அப்படிச் சொல்லவில்லை என்று சொல் பிறகு உன்னை இங்கு கொண்டுவந்து விடுகிறேன்" என்றது புலி. காய்ச்சலில் நடுங்குவதுபோல நடித்தது அது. "அப்படியே செய்கிறேன்" என்றது. புலியின் மேல் ஏறி அமர்ந்தது. அதைச் சுமந்து கொண்டு புலி செல்லத் தொடங்கியது. "புலியாரே! நில்லும்" என்று குரல் கொடுத்த ஆமை. "ஏன் நிற்கச் சொன்னாய்?" என்றபடியே புலி நின்றது. "புலியாரே! உன்முதுகில் அமர்ந்து இருக்க என்னால் முடியவில்லை. காய்ச்சலில் கீழே விழுந்து விடுவன் போல உள்ளது!" என்றது ஆமை.

"என் மனைவியிடம் நீ வந்தே ஆகவேண்டும். கீழே விழாமல் இருக்க, என்ன செய்யவேண்டும்? சொல்செய்கிறேன்! நீண்ட கொடி ஒன்றை உங்கள் வாயில் பற்றிக் கொள்ளுங்கள். அதன் இருமுனைகளையும் நான் இறுக்கிபிடித்துக்கொள்கிறேன். அதன் பிறகு நீங்கள் சென்றால் நான் கீழே விழமாட்டேன்!" "அப்படியே செய்கிறேன் என்ற புலி அருகில் இருந்த கொடி ஒன்றை இழுத்தது. அதன் நடுப்பகுதியை தன் வாயிலில் கவ்விக்கொண்டது. அதன் இருமுனைகளையும் ஆமை பிடித்துக்கொண்டது. "இப்போது நாம் செல்லலாமா?" என்று கேட்டது புலி. இங்கே நிறையக் கொசுக்கள் என்னைக்கடிக்கின்றன. அவை கடித்தால் என் காய்ச்சல் அதிகமாகிவிடும். குச்சி ஒன்றை எடுத்து என்னிடம் தாருங்கள்.



அதை வைத்து கொசுக்களை விரட்டுகிறேன். இந்த உதவி மட்டும் செய்யுங்கள்" என்றது ஆமை. அங்கும், இங்கும் தேடி குச்சி ஒன்றை எடுத்தது புலி. அதை ஆமையிடம் தந்தது. குச்சியை வாங்கிய ஆமை, இனி நான் கீழே விழமாட்டேன். நீங்கள் செல்லலாம்" என்றது.

அதைச் சுமந்து சென்ற புலி, தன் இருப்பிடத்தை அடைந்தது. உரத்த குரலில், "அடியே ஆமையை அழைத்து வந்திருக்கிறேன். என்மேல் சவாரி செய்வதாக அது சொல்லவில்லையாம். அதைச் சொல்ல ஆமை வந்துள்ளது. வெளியே வந்து பார்" என்று அழைத்தது. "அப்படியா?" என்றபடியே குகைக்கு வெளியே வந்தது பெண்புலி.தன் கணவனின் மேல் அமர்ந்திருந்த ஆமையைப்பார்த்தது. அந்த ஆமையின் கையில் கொடி இருந்தது.அது கடிவாளம் போல புலியின் வாயில் மாட்டப்பட்டு இருந்தது. இன்னொரு கையில் சவுக்கு போல குச்சி இருந்தது. அது தன் கணவனின் மேல் சவாரி செய்தபடி இருந்ததைப் பார்த்தது. அதனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அந்தக் காடே அதிரும்படி சிரித்தது. மனைவி இப்படி சிரிப்பதைப்பார்த்து, அதிர்ச்சி அடைந்தது ஆண் புலி. "ஏன் சிரிக்கிறாய்? சொல்லிவிட்டு சிரி" என்று எரிச்சலுடன் உறுமியது. "உங்கள் மேல் சவாரி செய்வதாகத் தான் இந்த ஆமை சொன்னது. அப்படிச் சொன்னதை உண்மையாக்கி விட்டதே. உங்கள் மேல் சவாரி செய்து வந்துள்ளதே. ..நீங்கள் குதிரைபோலச் சுமந்து வந்துள்ளீரே. இந்தக் காட்சியைப் பார்த்ததும், என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை" என்று சிரித்தது பெண்புலி.

ஆண்புலிக்கு தான் ஏமாந்தது அப்போதுதான் புரிந்தது. ஆமையின் அறிவுக்கூர்மையை பார்த்து வியந்தது. "நீ உண்மையிலே புத்திசாலிதான்!" என்று ஆமையைப் பாராட்டியது ஆண்புலி. "சரி!சரி!

கோபிக்காதீங்க...நானும் ஒரு ஜாலிக்குத்தான் இப்படிச் செய்தேன்!" என்று சொல்லி சமாளித்தது ஆமை.

# முஸ்லிம் அடிப்படைவாத குழுக்கள் இலங்கையில் செயற்படவில்லை

## பாதுகாப்பு செயலரின் கருத்துக்கு முஸ்லிம் பேரவை கண்டனம்

(கொழும்பு)

இலங்கைவாழ் முஸ்லிம் சமூகம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்து காரணமாக முஸ்லிம் மக்கள் கடும் வெறுப்படைந்துள்ளதாக இலங்கை முஸ்லிம் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை முஸ்லிம் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தது போன்று முஸ்லிம் அடிப்படைவாத குழுக்களோ, ஆயுதக்குழுக்களோ இலங்கையில் செயற்படவில்லை.

இலங்கையில் போர் நடைபெற்ற கடந்த 30 வருட காலத்தில் முஸ்லிம் மக்கள் எந்த தயக்கமுமின்றி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியதாகவும் முஸ்லிம் சமூகம் ஆயுத ஏந்தல்களுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்களுடன் கலந்துரையாடி உண்மைகளை அறியாது இப்படியான கருத்துக்களை வெளியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினரும் மேல்மாகாண ஆளுநருமான அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

இலங்கை முஸ்லிம் மக்கள் எந்த காலத்திலும் அடிப்படைவாத குழுக்களுடன் இணைந்து செயற்பட்டதில்லை. இலங்கையில் யுத்தம் நடைபெற்றபோது முஸ்லிம் மக்கள் பெரும்பான்மை சிங்கள மக்களுடன் சேர்ந்து ஒத்துழைப்புடன் செயற்பட்டனர்.

நான் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்த எண்ணியுள்ளேன் என அலவி மௌலானா மேலும் குறிப்பிட்டார்.

(அ-2)


**The Open University of Sri Lanka**
Faculty of Natural Sciences

*Applications are issued for*

**B.Sc. Degree Programme**

***Admission requirements:***

- 3 passes in G.C.E. A/L Science / Maths stream

(Applied Mathematics, Pure Mathematics, Combined Mathematics, Biology, Botany, Chemistry, Physics, Zoology), in any number of sittings

***Application forms:***

*Available from 12.08.2013 to 18.09.2013 at The Open University of Sri Lanka, Jaffna Regional Centre, Brown road, Kokkuvil.*

*Contact No: 0212223374*

**Closing date**
18.09.2013

Registrar
The Open University of Sri Lnaka

(சி/460)



## கோலாகல திறப்பு விழா

சாவகச்சேரி நகரில்
காலை 9.00மணிக்கு சுப நேரத்தில் திறப்பு விழா...

IOC
Lanka IOC
Dealer

**சிவா எரிபொருள் நிரப்பு நிலையம்**
**சிவா சேர்விஸ் ஸ்டேஷன்**
**சிவா சுப்பர் மார்க்கட்**
**சிவா ரெஸ்டோரண்ட்**

A9 வீதி, நுணாவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.



மாலை 2.00 மணி முதல்
நிகழ்ச்சிகள் ஆரம்பம்...

பிரபல தென்னிந்திய பாடகர்
"வேணாம் மச்சான் வேணாம்"
"ஆம்பலைக்கும் பொம்பலைக்கும்" புகழ்
**வேல்முருகன்**
மற்றும் நம் நாட்டு Super Star பாடக, பாடகிகள்
பலர் இணைந்து

பிரபாவின்
ஸ்ருதி
இசைக்குழுவினருடன் வழங்கும்


வேல்முருகன்



**இன்னிசை இரவு**


**09-09-2013** திங்கட்கிழமை

அனைவரும் வருக ...

(3877)


## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை திருநாவுக்கரசு (ராசு)



அளவெட்டி வடக்கு ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை திருநாவுக்கரசு 05.09.2013 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் இளைய புதல்வரும் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி-சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற கிருஷ்ண்பிள்ளை மற்றும் பாலகௌரி, இராசநாயகி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் கஜனி (UK), நிர்த்திகா, சுவர்னா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதாஸன் அவர்களின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு உடுவில் மேற்கு டச்சு றோட்டிற்கு அண்மையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**டச்சு றோட்,**
**உடுவில் மேற்கு.**
**0779773155**

**தகவல்**
**குடும்பத்தினர்**

(3881)





**புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!**

நல்லூரான் நிழலடியில் 100% Natural Pasteruized and Homogenize ஐஸ்கிறீம் With Minerels, Sylo Food and bavereges (pte) Ltd நிறுவனத்தின் அறிமுக விலையில் எமது நல்லூர் விற்பனை நிலையத்திற்கு வாருங்கள். சுவையுங்கள் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லுங்கள்.

No.231 , Temple Road, Nallur, Jaffna
T.P. 021 4926003

SYLO:- Sweet your Life Orbit

# மதம் மற்றும் கலாசார விடயங்களை மக்களிடமே விட்டுவிட வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

**சமய விவகாரங்களில் தலையீடு செய்யவேண்டாம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார். மதம் மற்றும் கலாசார விடயங்களை அந்தந்த மக்களிடமே விட்டுவிடவேண்டும். முஸ்லிம் சமூகம் குறித்த பாதுகாப்பு அமைச்சரின் எச்சரிக்கைக்கு நீதியமைச்சர் அதிருப்தியை இவ்வாறு வெளியிட்டுள்ளார்.**

இலங்கையில் முஸ்லிம் கடும் போக்குவாதம் தலைதூக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகம் குறித்த அவரின் கருத்து எமக்கு அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

கடந்த ஆண்டு முதல் முஸ்லிம்கள் மீதும், அவர்களது வர்த்தக நிறுவனங்கள், பள்ளிவாசல்கள் மீதும் அதிகளவிலான தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் கடும்போக்குவாதம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட கருத்து இஸ்லாமிய நாடுகளை அதிருப்தியடையச் செய்யக் கூடுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதேவேளை நீதியமைச்சர் ஹக்கீமின் இக்கருத்துக்கு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மாற்று கருத்துத் தெரிவிக்கையில்,

கடும்போக்குவாதம் குறித்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை.

யுத்தத்தின் பின்னரான இலங்கைக்கு மட்டுமன்றி பிராந்திய வலயத்தின் ஏனைய நாடுகளுக்கும் கடும்போக்குவாதம் பாரியளவில் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் கடும்போக்குவாதம் குறித்து அண்மையில்தான் கருத்து வெளியிட்டிருந்தமைக்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் கள நிலைமைகளை அறிந்து கொள்ளாது, கண்மூடித் தனமாக கருத்து வெளியிட்டுள்ளார்.

கடும்போக்குவாதம் காரணமாக உலகமே இன்று பாதிக்கப்பட்டுள்ளது என்பதனை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

கடும்போக்குவாதத்தைக் கட்டுப்படுத்த நாம் பல நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். புலனாய்வுப் பிரிவு, சுங்கப் பிரிவு, விமான நிலைய பாதுகாப்பு போன்றவற்றின் ஊடாக இந்த கடும்போக்குவாதத்தை கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

ஈரான், பாகிஸ்தான், சவுதி அரேபியா பற்றி தாம் குறிப்பிடவில்லை எனவும், அவற்றை ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்துள்ளார். தமது கருத்தை சரியாக புரிந்துகொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முஸ்லிம் நாடுகள் ஆதரவளித்த விடயம் வேறு முஸ்லிம் கடும் போக்குவாதத்தினால் உலக சமூகம் எதிர்நோக்கி வரும் பாதிப்பு குறித்தே நான் குறிப்பிட்டேன் .சிங்கள கடும் போக்குவாதம் பற்றியும் நான் சுட்டிக் காட்டியிருந்தேன்.

முஸ்லிம் கடும் போக்குவாதத்திற்கு முஸ்லிம் நாடுகளே பொறுப்பு என நான் குறிப்பிடவில்லை. ரவூப் ஹக்கீம் இதனை பிழையாக அர்த்தப்படுத்தியுள்ளார்.

முஸ்லிம் அடிப்படைவாதம் உலகின பல பகுதிகளில் வியாபித்துள்ளமை வெளிப்படையான உண்மை.

வெளிநாட்டு புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்தக் கருத்துக்களை தான் வெளியிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வரவு செலவு திட்டம் தயாரிப்பது குறித்து ஜனாதிபதி ஆலோசனை



2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிப்பது தொடர்பாக ஆலோசனைகளைப் பெறும் நோக்குடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் தொடர் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

குறித்த கலந்துரையாடல்கள் சகல துறைகளினதும் ஆலோசனைகளை பெறும் நோக்குடனேயே நடைபெற்று வருகின்றது.

இதில் ஒரு அங்கமாக கடந்த 5 ஆம் திகதி வர்த்தக சம்மேளனத்துடனான கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர்களான பசில் ராஜபக்ச, மகிந்த யாப்பா அபேவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, ஜோன்ஸ்டன் அபர்னாண்டோ, விமல் வீரவன்ச, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோருடன் நிதி அமைச்சின் செயலர் கலாநிதி பீ. பி. ஜயசுந்தர உட்பட அமைச்சின் செயலர்களும் இச் சந்திப்பின் போது அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# சர்வதேச கண்காணிப்புடன் வடக்கு மாகாண தேர்தல்

## அதன் பெறுமதியை உணருங்கள் - சுமந்திரன் எம்.பி

எங்கள் மக்களுடைய தீர்ப்பை சர்வதேசத்திற்கு வெளிக்கொண்டு வருகின்ற ஒன்றாக இத்தேர்தல் முடிவு அமைய வேண்டும். இத்தேர்தல் வெறும் உள்ளூர்த் தேர்தலாகவோ அன்றேல் வெறும் மாகாண சபைத் தேர்தலாகவோ இல்லாது சர்வதேசமே உற்று நோக்குகிற தேர்தலாக மாறியுள்ளது என பாரளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபைக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டம் முழங்காவில் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

இப்பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் தனது உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேறு எந்த ஒரு நாட்டிலும் ஒரு மாகாணசபைத் தேர்தலுக்கும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் வருவதில்லை. ஆனால் இங்கு நடைபெறப்போகும் மாகாணசபைத தேர்தலுக்கு இரண்டு இடங்களைச் சேர்ந்த சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் வருகிறார்கள்.

இலங்கை அரசாங்கமும் அதற்கு இடங்கொடுக்க வேண்டிய நிலையில் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி இணங்கியுள்ளது. அதற்குக் காரணம இதுதான். இத்தேர்தல் சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழ் சர்வதேசத்தின் மேற்பார்வையின் கீழ் சர்வதேசத்தின் அழுத்தத்தின் மீது நடைபெறுகிற ஒரு தேர்தல் ஆகையால் சர்வதேச சமூகம் இந்தத் தேர்தலில் எத்தகைய ஜனநாயகத் தீர்ப்பை மக்கள் அளிக்கிறார்கள் என எதிர்பாரத்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

இந்தத் தேர்தலில் அளிக்கப்படும வாக்குகள் அரசாங்கத்திற்காக, அரசாங்கம் கொடுக்கும் நன்மைகளுக்காக, அறிந்தவர் ,தெரிந்தவர், உறவினர் என்பதற்காக அளிக்கப்படும் வாக்குகள் அல்ல.

உங்கள் வாக்களிப்பு விகிதாசாரம் எவ்வளவுக்கு உயர்கிறதோ அந்த அளவுக்கு எங்களது ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். நீங்கள் வாக்களிப்பதோடு மற்றவர்களையும் வாக்களிப்பதற்கு தூண்ட வேண்டும்.

இப்போது சர்வதேசத்தை இணைத்து நாம் தொடுத்திருக்கும் ஜனநாயகப் போரிலே நாம் வெலவதே உறுதி எனத் தெரிவித்தார். (அ-2-4)

# ஒரு இலட்சத்து 46679 தமிழர்கள் எங்கே?

## ஜேர்மன் அவை பிரதிநிதிகள் கேள்வி

ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் சர்வதேச மன்னிப்புச்சபை அமைப்பினால் நடைபெற்ற காணாமற்போதலுக்கு எதிரான சர்வதேச நினைவு தினத்தில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழர்கள்ளங்கே? என ஜேர்மன் மக்கள் அவை பிரதிநிதியால் கேள்வியெழுப்பப்பட்டது.

அதைத் தொடர்ந்து அச்சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் திடீர் மௌனம் ஏற்பட்டது.

சர்வதேச நாடுகளில் நடைபெறும் மனிதவுரிமை மீறல்கள், மக்கள் காணாமற்போதல் விடயமாக உரையாடியபோது சிங்கள பேரினவாத அரச ஈழத்தமிழர்கள் மீது நடத்தும் இன அழிப்பின் வடிவங்களில் காணாமற்போதல் என்பதும் ஒரு வகையே என்று அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையில் காணாமற்போதல் என்பது தமிழ் இனத்துக்கு எதிராக நடைபெறும் அரச பயங்கரவாதத்தால் திட்டமிட்டு நடத்தப்படும் சதியே.

இறுதிப்போரில் காணாமற் போனவர்களின் தொகை நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 ஆகவே சுட்டிக்காட்டப்படுகிறது.



இந்நிகழ்வில் உரையாற்றிய European Center for Constitutional and Human Rights அமைப்பைச் சார்ந்த சட்டத்தரணி Andreas Schuller இலங்கை அரசு மிக மோசமான மனிதவுரிமை மீறல்களைச் செய்து வருகின்றது. அதை மனிதவுரிமைகள் ஆணையத்தின் தலைவர் திருமதி நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் கோடிட்டுக் காட்டுகின்றது என்று குறிப்பிட்டார். (அ-2)

# அரச ஊழியர்களுக்கு பயிற்சி கருத்தரங்கு

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது கடமைகளில் ஈடுபடுத்தப் படவுள்ள அரச ஊழியர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்குகள் தேர்தல்கள் செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.அந்தந்த தேர்தல் அலுவலகங்களில் குறித்த பயிற்சிக் கருத்தரங்குகள் வழங்கப்படுவதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தேர்தலின் போது வாக்குச் சாவடிகளில் தலா இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீதம் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனரெனவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார். (அ-2)

# சீனாவின் முக்கிய அரசியல் பிரமுகர் இலங்கை வருகை

சீனாவின் முக்கிய அரசியல் பிரமுகரான லியு யுன்ஷான் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரும் இவர், பிரமுகர் தி.மு.ஜயரத்ன மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

மேலும் பிரதமர் தி.மு.ஜயரத்ன முன்னிலையில் சீனா-இலங்கை தொடர்பிலான பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர் நாளை திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கட்டடத் தொகுதி, சுதந்திர சதுக்கம், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

இவர் சீன அரசின் பணியகத்தின் நிலையியல் மற்றும் மத்திய குழுவின் முக்கிய பிரதிநிதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரசாங்கம் 17வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சவால்

(கொழும்பு)

**மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஜனநாயக அரசாங்கம் என்றால் 17 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

17 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச்சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்காவிடின் 2014 ஆம் ஆண்டில் அரசாங்கத்தை மாற்றும் தேர்தல் ஒன்றை பெற்று தீர்மானத்தை எடுக்க மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்படும்.

17 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி நாட்டில் சுயாதீன பொலிஸ், சுயாதீன அரச சேவை, சுயாதீன நீதிச்சேவை ஆகிய ஆணைக்குழுக்களை நியமிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்தும் சட்டமூல யோசனையையும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.

இந்த அரசாங்கம் ஒரு ஜனநாயக அரசாங்கம் என்றால் தகவல் அறியும் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்க வேண்டும்.

மஹிந்த அரசாங்கம் ஒரு சர்வாதிகார அரசாங்கம். இந்த அரசாங்கம் மக்களின் வாக்குரிமைகளை கொள்ளையிட்டுள்ளது. தேர்தல்களை நடத்துவதால் மட்டும் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டு விடாது.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி செயற்பாட்டில் இருக்க வேண்டும். அரசாங்கம் ஆங்காங்கே தேர்தலை நடத்துகிறது.

இது சுதந்திரமான நீதியான தேர்தல் அல்ல. தேர்தல் நடத்துவது மட்டும் ஜனநாயகத்தின் அடையாளமாகிவிடாது.

சிம்பாவே நாட்டிலும் தேர்தல் நடத்தப்படுகின்றது. எனினும் தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதுமாக இருக்க வேண்டும்.

நீதிமன்றத்தில் தற்போது சுயாதீன தன்மையில்லை. நீதித்துறையின் சுதந்திரம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஊடக சுதந்திரம், நல்லாட்சி என்பனவும் வீழ்ச்சியடைந்துள்ளன என்றார். (அ-2)

# சிங்கப்பூருக்கு செல்வதாயின் பணியகத்தில் பதிவு செய்க

## பெண்களுக்கு அறிவுறுத்தல்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், தமது பணியகத்தில் பதிவு செய்யாது சிங்கப்பூருக்கு தொழிலுக்காக செல்ல வேண்டாமென இலங்கைப் பெண்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கைப் பெண்களை பல்வேறு தொழிலுக்கென சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று, விபச்சார தொழிலில் ஈடுபடுத்துவதாக பணியகத்தின் ஊடக பேச்சாளரும், பிரதி இணைப்பதிகாரியுமான மங்கள ரன்தெனிய கூறினார்.

அவ்வாறு பாதிக்கப்பட்ட யுவதிகள் பலர், கடந்த காலங்களில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூருக்கு விசா இல்லாது, விமான பயணச்சீட்டுகளுடன் பயணிக்க முடியுமென்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு, சில தரகர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே, சிங்கப்பூருக்கு தொழில் நிமிர்த்தம் செல்லும் பெண்கள், தொழில் வாய்ப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்கள் எதுவுமின்றி செல்ல வேண்டாமென பணியகம் வலியுறுத்தியுள்ளது.

சிங்கப்பூருக்கு சென்று, இவ்வாறான இன்னல்களை எதிர்நோக்கிய இலங்கைப் பெண்கள் தொடர்பில், சிங்கப்பூரிலுள்ள இலங்கைத் தூதரக பிரிவுகள் ஊடாக கண்டறியவுள்ளதாக மங்கள ரன்தெனிய தெரிவித்தார்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் இருப்பது கண்டறியப்பட்டால், அவர்கள் உடனடியாக நாட்டிற்கு மீண்டும் அழைத்து வரப்படுவார்கள் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்துங்கள்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(ஜெயபுரம்)

நாம் மக்களுக்காக உண்மையுடன் உழைத்துவருவதனாலேயே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தொடர்ந்தும் மக்கள் பணியை மேற்கொள்ளக் கூடிய ஆதரவை மக்கள் எமக்கு வழங்கி வருகின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஜெயபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நாம் ஏன் போட்டியிட வேண்டியுள்ளது என்னும் விடயத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது நீண்ட பெரும் யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறிய மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட அளவு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் இன்று ஒரு தேர்தலை சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

ஆனால் மக்களின் தேவைகள் அனைத்தும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அனைத்திற்கும் இன்னமும் முழுமையாக தீர்வுகள் எட்டப்படவில்லை.

எனவே மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். இடையில் வந்துள்ள தேர்தல், முன்னெடுக்கப்பட்டு வரும் துரித மேம்பாடுகளுக்கு எவ்விதத்திலும் இடையூறாக அமைந்து விடக்கூடாது. அதனால் அடுத்து வரும் காலங்களில் மக்களின் நலன்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுத்தி விடக் கூடாது என்ற விடயத்தில் நாம் மிகுந்த கரிசனையாகவுள்ளோம். அதன் அடிப்படையிலேயே இந்தத் தேர்தலில் நாம் வெற்றியடைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே கிடைக்கப் பெற்றுள்ள சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி விரைவாக முன்னேற்றத்தை எட்ட வேண்டும். ஏனெனில் நாட்டில் யுத்த பாதிப்புக்களுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்கள் இன்று மிகப் பாரிய முன்னேற்றங்களை எட்டியுள்ளன.

எனவே எமது பிரதேசங்களும் விரைவான முன்னேற்றத்தை எட்ட வேண்டும். அப்போதுதான் நாட்டின் ஏனைய சமூகங்களுக்கு நிகரான வாழ்நிலைகளை நாமும் எட்ட முடியும்.

நாம் இந்த அரசில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்காளிக்கட்சியாக இருந்து கொண்டு மக்கள் எமக்கு வழங்கியுள்ள அரசியல் பலத்தை வைத்துக் கொண்டு மக்களுக்கான பணிகளையே மேற்கொண்டு வருகின்றோம் என்றார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09.2013
08

- 1514 - லித்துவேனியா மற்றும் போலந்துப் படைகள் ஓர்ஷா என்னுமிடத்தில் ரஷ்யாவைத் தோற்கடித்தன.
- 1727 - லண்டன் கேம்பிறிட்ஜ்ஷயர் என்னுமிடத்தில் குழந்தைகள் பொம்மைக் களியாட்ட விழா ஒன்றில் இடம்பெற்ற பெருந்தீ விபத்தில் 78 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளாவர்.
- 1831 - 4 ஆம் வில்லியம் பிரித்தானியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1888 - லண்டனில் கிழிப்பர் ஜேக்கினால் கொல்லப்பட்ட இரண்டாவது நபரான அன்னி சப்மனின் உடல் கண்டெடுக்கப்பட்டது.
- 1900 - டெக்சாசை சூறாவளி கால்வெஸ்டன் தாக்கியதில் 8 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- 1923 - கலிபோர்னியாவில் 7 அமெரிக்கக் கடற்படைக்கப்பல்கள் மூழ்கின.
- 1926-நாடுகளின் கூட்டமைப்பில் ஜேர்மனி சேர்ந்தது.
- 1930 - ஸ்கொட்ச் நாடா முதன்முதலாக விற்பனைக்கு விடப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி போரில் சரணடைந்ததை அமெரிக்கத் தளபதி டுவைட் டி. ஐசனாவர் அறிவித்தார்.
- 1944- இரண்டாம் உலகப் போர்: வி2 ரொக்கெட் மூலம் முதல் தடவையாக லண்டன் நகரம் ஜேர்மனியினால் தாக்கப்பட்டது.
- 1951 - பசுபிக் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு 48 நாடுகள் சான்பிரான்சிஸ்கோவில் ஜப்பானுடன் அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்தின.
- 1959 - ஆசிய தொழில்நுட்பக் கழகம் பாங்கொக் நகரில் நிறுவப்பட்டது.

**பிறப்புக்கள்**

- கி.மு.20/19 - கன்னி மரியா, இயேசு கிறிஸ்துவின் தாய்
- 1913 - ஆர். மகாதேவன், தமிழக நகைச்சுவை எழுத்தாளர் (இ. 1957)


**இறப்புகள்**

- 1980 - வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1908)
- 1995 - நா. முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர் (பி. 1918)
- 2008 - குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் (பி. 1935)

**சிறப்பு தினங்கள்**

- உலக எழுத்தறிவு தினம்
- இயேசு கிறிஸ்துவின் அன்னை மரியாள் பிறப்பு

**குன்னக்குடி வைத்தியநாதன்**



1935 இல் தமிழ்நாட்டின் குன்னக்குடியில் பிறந்த வைத்தியநாதன் தனது 12 ஆவது அகவையிலிருந்து இசைக் கச்சேரிகளில் பங்கேற்றார்.

ஆரம்பத்தில் செம்மங்குடி சீனிவாசய்யர், மகாராஜபுரம் சந்தானம், சூலமங்கலம் சகோதரிகள், சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோருடன் இணைந்தும் பின்னர் தனிக் குழுவை அமைத்து கச்சேரிகள் நடத்தி வந்தார். தனியாகவும் பின்னர் கச்சேரி செய்ய ஆரம்பித்தார்.

திருமலை தென்குமரி (1970) திரைப்படத்திற்கு இசையமைத்தமைக்காக தமிழக அரசின் சிறந்த் இசையமைப்பாளர் விருது பெற்றார். திருவையாறு தியாக பிரம்ம சபையின் செயலராக 28 வருடம் பணியாற்றியுள்ளார். தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பை நிறுவி இசையால் நோய்களை குணமாக்க முடியுமா என்ற ஆய்விலும் ஈடுபட்டிருந்தார்.

இசைப்பேரறிஞர் விருது, 1989, இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது ஆகியவற்றைப் பெற்ற இவர் 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி தனது 75 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

# நவநீதம்பிள்ளை வருகை நன்மை தருமா...?

ஈழ இனப்படுகொலைப் போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கழித்து இலங்கைக்கு வந்திருக்கிறார் ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை.

நவிபிள்ளையின் வருகை முடிவானதுமே, இறுதிப்போர் நடந்த பகுதிகளைக் கழுவித் துடைத்து எஞ்சிய தடயங்களையும் அழித்து அலங்கரித்தது இலங்கை இராணுவம்.

மக்கள் வாழ்விடங்களை ஆக்கிரமித்து நின்ற இராணுவத்தினர், மிகத் தற்காலிகமாக முகாம்களுக்குள் போனார்கள். ஏராளமான இராணுவத்தினர் மஃப்டி உடைகளில் நவிபிள்ளைள வருவதற்கு முன்னர் வந்து சென்ற பின்னரும் மக்களை மிரட்டினார்கள்.

நவிபிள்ளையை புலிப்பிள்ளை என்றும் பிரபாகரனின் சகோதரி என்றும் சிங்கள ஊடகஙங்கள் சில எழுதின. இன்னொரு பக்கம் இலங்கையின் அமைச்சர் மேர்வின் சில்வா சிங்கள விஜயன் வேட்டுவப்பெண்ணான குவேனியைத் திருமணம் செய்துகொண்டது போல, நான் நவநீதம்பிள்ளையைத் திருமணம் செய்ய விரும்புகிறேன் என்று சொன்னது வக்கிரத்தின் உச்சம். இதெல்லாம் நவிபிள்ளையை மனரீதியாகச் சோர்வுறச் செய்யும் சிங்களவர்களின் அரசியல்.

நான் இந்தியப் பாரம்பரியத்திலிருந்து வந்திருந்தாலும்கூட தென் ஆப்ரிக்கக் குடிமகள் என்று சொல்வதைத்தான் பெருமையாக நினைக்கிறேன். என் மீது புலிகளின் பிரதிநிதி என்றும் பணத்துக்காகச் செயற்படுபவள் என்றும் இழிவான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது மிக மோசமான தாக்குதல் என்று சிங்களவர்களைக் கண்டித்த நவநீதம்பிள்ளை பல்லாயிரம் உயிர்களையும் கொன்றொழித்தார்கள் என்பதையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

நவிபிள்ளையிடம் இராணுவத்தினர் தாங்கள் புதிதாக வேய்ந்த சாலைகளையும் சில கட்டடங்களையும் தயார்ப்படுத்தி வைத்திருந்த ரெடிமெட் முகாம்களையும் காட்டினர்.

சமீபத்தில் கட்டிய யாழ். வைத்தியசாலையை நவநீதம்பிள்ளையிடம் காட்டியபோது கடுப்பானவர். உங்கள் அரசுத் திட்டங்களின் அபிவிருத்திகளைக் காணவோ, அதன் அருமை பெருமைகளைக்கேட்கவோ நான்வரவில்லை. நான் மக்களைச் சந்திக்கவேண்டும். என்னை சுதந்திரமாக அனுமதியுங்கள். ஐ.நா.வால் எனக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகளே எனக்குப் போதும். உங்களுடைய இராணுவப் பாதுகாப்பு தேவையில்லை என்று காட்டம் காட்டினார். அதன் பின்னரே ஈழ மக்கள் நவநீதம்பிள்ளையிடம் தங்களின் மனக்குறைகளை வெளிப் படுத்த வாய்ப்பு கிடைத்தது.

சாலை, ரயில் பாதைகள், கோயில் கட்டடங்கள் எல்லாம் நன்றாக இருக்கின்றன.. ஆனால், மீனவர்களும் விவசாயிகளும் அவர்களின் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் இருக்கின்றன. ஆனால், அதில் வாழ முடியாத அளவுக்கு இராணுவக் கண்காணிப்பு இறுகியிருக்கிறது! சிங்களவர்கள் அனுமதித்த இடங்களைப் பார்வையிட்ட பிறகு, நவநீதம்பிள்ளை சொன்ன வார்த்தைகள் இவை.

யாழ்ப்பாணத்தில் நவநீதம்பிள்ளையைச் சந்தித்த விடுதலைப்புலிகளின் தளபதி எழிலனின் மனைவி அனந்தியின் அனுபவம் இது...

இறுதிப்போரின் பின்னர் ஃப்ரான்சிஸ் ஜோசப் அடிகளாரின் தலைமையில் என் கணவர் எழிலனும் பல நூறு போராளிகளும் இராணுவத்திடம் சரணடைந்தனர். அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற என் கேள்விக்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை என்று நவிபிள்ளையிடம் சொன்னேன்.

என்னைப்போல பல நூறு பெண்கள் தங்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காக மனுக்களைக் கையளித்தனர். எங்கள் குறைகளைக் கனிவோடு கேட்டார். உரிய முறையில் தீர்வு காண்பதாகவும் சொன்னார். நவநீதம்பிள்ளை யாழ்ப்பாணத்தில் இருந்தபோது இலங்கை அரசு தற்காலிகமாக இராணுவத்தை அகற்றி இருக்கிறது.

அவர் திரும்பிச் சென்றதும் மறுபடியும் இராணுவம் வந்துவிடும். ஆனால், இதை எல்லாம் நவநீதம்பிள்ளையிடம் சொல்வதற்கான கால அவகாசமோ, சூழலோ இல்லை என்கிறார்.

உலகெங்கிலும் நடைபெறும் போரில் உயிரிழப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது நவிபிள்ளை கடைப்பிடித்து வரும் பண்பு.

வன்னிப் போரில் கொல்லப்பட்ட இராணுவத்தினர், புலிகள், பொதுமக்களுக்கு நந்திக்கடலில் அவர் அஞ்சலி செலுத்த விரும்பினார். இதை முன்கூட்டியே அறிந்துகொண்ட சிங்கள இராணுவத்தினர், ஐ.நா. அதிகாரிகளைத் தொடர்புகொண்டு, அப்படிச்செய்தால் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்று பயமுறுத்தி முல்லைத்தீவுக்குள் நவிபிள்ளையை அனுமதிக்க முடியாது என்று அச்சுறுத்தினார்கள்.

நவிபிள்ளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தது அவரது வருகையில் குறிப்பிடத்தக்க அம்சம்.

இதுபற்றி வடக்கு மாகாண முதல்வர் வேட்பாளரான விக்னேஸ்வரனிடம் பேசியபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நவிபிள்ளையிடம் மக்களின் பல்வேறு பிரச்சினைகளையும் சிவில் உரிமைகள் தொடர்பாகவும் சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் பல கோரிக்கைகளை முன்வைத்தோம். அவரும் உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார். பொறுத்திருந்து பார்ப்போம் என்றார் நம்பிக்கையும் ஆதங்கமும் கலந்த குரலில்.

ஏழு நாள் இலங்கைப் பயணத்தில் எட்டு தரப்பினரைச் சந்தித்த நவநீதம்பிள்ளை, இலங்கை மண்ணில் இருந்தபடியே கூறிய கருத்துக்கள் முக்கியமானவை.

இதற்கு முன்னர் இப்படி ஒரு விசும்பலையும் கண்ணீரையும் நான் காணவில்லை. அவர்களுக்கு ஆறுதல் சொல்லக் கூட என்னால் முடியவில்லை.

பெரும்பாலான பெண்கள், வீட்டில் கணவரையோ, மகனையோ இழந்திருக்கிறார்கள். என்னுடன் உரையாடிய பொதுமக்களையும் சில மனித உரிமை ஆர்வலர்களையும் அதற்குப் பின் இராணுவம் அச்சுறுத்தி துன்புறுத்தியிருக்கிறது. இது இலங்கையில் நிலவும் ஏதேச்சதிகாரப் போக்கையே வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.



இந்தக் கண்காணிப்பையும் துன்புறுத்தலையும் பார்க்கும்போது இங்கு ஜனநாயகம் மிக மோசமான நிலையில் உள்ளது.

ஐ.நா. அமைப்புகளும் அமெரிக்காவும் ஏற்கனவே சொல்லியிருந்தபடி இறுதிப் போரில் மக்கள் கொல்லப்பட்டது குறித்து இலங்கை நம்பகமான விசாரணை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண்டிவரும் என்று எச்சரித்தார்.

இப்படிப் பல நம்பிக்கைகளை நவநீதம்பிள்ளையின் வருகை விதைத்தாலும் அவரது சில வார்த்தைகளே அந்த நம்பிக்கையிலும் நச்சு பாய்ச்சுகிறது!

இனப்படுகொலை என்று தமிழர்கள் சொல்கிறார்கள். நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களா? என்றகேள்விக்கு, இனப்படுகொலை என்ற வார்த்தையை என்னிடம் யாரும் பயன்படுத்தவில்லை. அதிகாரிகளோ, பொதுமக்களோ, ஊடகங்களோ சொல்லவில்லை.

இனப்படுகொலை என்ற வார்த்தை சட்டபூர்வமான வார்த்தை, ஒரு மக்கள் கூட்டத்தை இனரீதியாக ஒதுக்கி கொலை செய்திருந்தால் அதை நிரூபிக்க ஆதாரங்கள் வேண்டும்.

ருவாண்டாவில் இனப்படுகொலைக்கான மிகத் தெளிவான ஆதாரங் கள் இருந்தது. இலங்கையில் நிகழ்ந்தவை இனப்படுகொலையா என்பது பற்றி முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு முடிவு எடுக்கப்படவேண்டும் என்று நழுவினார்.

நீங்கள் சென்ற பிறகு மக்களை இராணுவம் அச்சுறுத்தினால் ஐ.நா.வோ நீங்களோ பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பீர்களா? என்று கேட்டதற்கு நான் எப்படி பாதுகாக்க முடியும். இது சிக்கலான விடயம். அவர்களைப் பாதுகாப்பது கடினம்தான். என் வேலை இங்குள்ள சூழலைக் கணித்து அறிக்கை தாக்கல் செய்வது மட்டுமே என்றார்.

தனது வருகை சம்பிரதாய சடங்காக மாறிவிட்க்கூடாது என்ற பொறுப்பு, நவநீதம்பிள்ளைக்குத்தான் இருக்கிறது.

விகடன்

# கதண்டு மகரிஷியின் கோபம்



ஆன்மீகம் 110

சித்தர்கள் இவர்கள் மீது கோபத்தில் இப்படி செய்து விட்டனர். அதனால் உனக்கும் தண்டனை. உடனே சஞ்சீவித் தைலத்தைப் பூசிக்கொள் என்று சித்தர் என்னிடம் உபதேசித்தார்.

ஒட்டுனர் மூர்த்தி காயம் அடைந்தவர்களுக்குத் தைலத்தைப் புசி, எனக்கும் பூசி முப்பது நிமிடம் திகைத்துப் போனோம். கமிசனர் வி.ராமதாஸ், ஐ.ஏ.எஸ். அரசுச் செயலர் திரு. சண்முகசிகாமணி ஐ.ஏ.எஸ் கனகய்யா டி.சி, அவர்களும் ஆடிப்போய் இந்த பொடியனை நம்பி காட்டுக்கு வந்து மாட்டிக் கொண்டோமே என்று நினைத்தார்களோ என்னவோ எங்களைப் பார்த்து மிகவும் வருத்தப் பட்டார்கள்.

மின்னல் வேகத்தில் தலைமை ஏற்று வந்து எனக்கு ஏதும் நடக்காதது போல், அவர்களைத் தேற்றினேன். இந்த இடத்தில் இதுதான் முதல் தடவை. பரவாயில்லை. யாரோ தவறு செய்திருப்பார்கள், ஒருவேளை நான்கூட பாவியாய் இருப்பதால் இதுபோன்று நடக்கும் என்று சொன்னேன்.

இனி எதுவும் நம்மைத் தீண்டாது என்று கூறி தேநீர் போட்டுக் கொடுத்து அனைவரும் குடித்த பிறகு, தட்டு முட்டு சாமான்களைக் கட்டிக்கொண்டு மூன்று மணி நேரத்தில் குதம்பைச் சித்தர் வாசம் செய்யும் குகைக்குச் சென்று ஓய்வு எடுத்தோம்.

அரசுச் செயலரும் கமிசனரும் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். உடல் வலிக்கிறதா என்றனர். இதெல்லாம் நாம் வாங்க வேண்டிய வரப்பிரசாதம். அதனை விடுங்கள் என்று அங்கு தீர்த்தமாடி இளைப்பாற வைத்து ஐந்து மணி நேரத்தில் தாய்பாதம் இருக்கும் இடத்தை நோக்கிப்போய்ச் சேர்ந்ததும் சுடச்சுட! சாம்பார் சமையல் செய்து ஒரு மணி நேரத்தில் பரிமாற தேவாமிருதம்போல அனைவரும் ஒடி பிடி பிடித்தனர்.

அங்கு காட்டவேண்டிய ரகசிய இடங்களைக் காட்டினேன். கமிசனர் அவர்களுக்கு முறையாக பல மந்திரங்கள் தெரிந்ததால் குங்கும அர்ச்சனை செய்யவும் அம்பாள் நேரில் காட்சி கொடுக்க அரண்டு போய்விட்டார்.



தாய்பாதத்தில் அன்னை சித்தர்

அம்பாள் பாதத்தில் முறையாக பூசை செய்து வேள்விகள் செய்து விட்டு 17 பேரில் சிலரை மேல் குகையிலும் அரசுச் செயலர் கமிசனர் அவர்களைப் பாதாளச் சுரங்கம் போன்ற குகைக்குள் தங்க வைக்க அற்புதமான ஜோதி அங்கு எரிந்தது ஆச்சரியம்! யாரோ ஏற்றிவிட்டதுபோல் இருக்கு! அரசுச் செயலரும் கமிசனர் திரு.ராமதாஸ் அவர்களும் தியானத்தில் இருக்க பக்திப்பரவசமாகிவிட்டது. இந்து சமய அறநிலையத்தினர் மேல் குகையில் தங்கி உறக்கத்தில் மூழ்கிப் போனார்கள். பாதாளக் குகையில் அக்கினி மூட்டவும் எங்கள் குகைக்கு மேல் இருபது அடி மலைப் பாம்பின் ஓசை கேட்டது. உடுக்கை போல் சத்தம் கேட்டது. அந்தப் பாம்பின் நீளம் எவ்வளவு என்பதை அதன் ஓசையைக் கண்டு நிர்ணயித்துக் கொள்ளலாம்.

பொதுவாக மலைப் பாம்புகள் நதிக்கரை ஓரம் தன் வாயைத் திறந்து இரைக்காக அப்படியே இருக்கும்.

காட்டிலுள்ள நரி ஏதோ மாமிச வாடை என்று அதன் வாய்க்குள் போகும். சமயம் பார்த்து மலைப் பாம்பு லபக் என்று விழுங்கிவிடும்.

அதன் உணவை ஜீரணிக்க இரண்டு முறுக்கு முறுக்கும். இப்படித்தான் மலைப்பாம்புக்கு பகவான் பல வகையில் உணவு கொடுக்கிறார்.

அதேபோல் மனிதரில் சிலர், பலர் கண்களுக்கு அவர்கள மலைப்பாக உள்ளனர். எனக்கோ அவர்கள் எத்தனைக் காலம் பூலோகத்தில் வாழப் போகிறார்கள் என்ற மனக் கவலையும் சிரிப்பும் வரத்தான் செய்கிறது.

இருந்தாலும் தான் என்கிற அகங்காரத்தில் உள்ள மனிதரை யார்தான் காப்பார்கள்?

இரவு முழுவதும் கமிசனர் வி.ராமதாஸ் ஐ.ஏ.எஸ் அவர்களும் அரசுச் செயலரும் இந்து தருமம் ஓங்கி வளர செய்த தவத்தை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

(தொடரும்)


அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# நரேந்திர மோடிக்கு ஆதரவாக களமிறங்குவாரா நடிகர் விஜய்?

அதே நேரத்தில் மைனாரிட்டி சமுதாய ரசிகர்கள் அவருக்கு அதிக அளவில் இருப்பதாகவும் ஒரு விதக் கருத்து மேலோங்கி நிற்கிறது. இந்த அடிப்படையில்தான் முதலில் அவர் காங்கிரஸுடன் நெருக்கமாகப் போகலாம் என்று நினைத்தார். ஆனால், இனி காங்கிரஸிடன் தோழமை கொள்வது நல்ல சகுனமாக இருக்காது என்ற நடிகர் விஜய் நினைக்கிறார். அதற்கு காரணம் ஆல் இந்தியா அளவில் காங்கிரஸ் கட்சிக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்பட்டு வரும் நெருக்கடிகள் என்பதைவிட அக்கட்சி மீண்டும் மத்தியில் ஆட்சிக்கு மூன்றாவது முறையாக வருமா என்ற கேள்வி அவர் மனதில் ஒங்கி ஒலிக்கிறது.

இதுபோன்ற சூழ்நிலையில் வருகின்ற செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி தமிழகத்திற்கு வருகிறார் நரேந்திரமோடி. இன்றைக்கு தமிழகத்தில் திரையுலக பிரபலங்கள் ஆதரவு இல்லாமல் இருப்பது பா.ஜ.க.தான். அக்கட்சிக்கு முன்பு இருந்த சுகுமாரன் நம்பியாரும் இப்போது இல்லை. இந்த சூழ்நிலையில் தமிழக வாக்காளர்களை கவர்ந்து இழுக்க, நடிகர் விஜய் பக்கம் கவனம் செலுத்தலாமா என்ற சிந்தனை தமிழக பா.ஜ.க மேலிடத் தலைவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்தக் கட்சிக்குப் போகலாம் அல்லது அரசியலை எப்படி மேலும் தொடரலாம் என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் நடிகர் விஜய் இந்த யோசனைக்கு ஆதரவு தெரிவிப்பார் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவரை பா.ஜ.க. விற்கு இழுக்கலாம். அல்லது பா.ஜ.க தலைமை. குறிப்பாக தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் ஜெயிக்க வேண்டும் என்பது அ.தி.மு.க தலைமையின் எண்ணம். அதை சமீபத்தில் தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் வைத்தியலிங்கத்தின் மகன் திருமண விழாவில் வெளிப்படையாகவே பேசியிருக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. இது ஒரு முக்கியத் திருப்பமாக பா.ஜ.க நினைக்கிறது. கூட்டணியே இல்லை என்ற நிலைப்பாட்டை அ.தி.மு.க எடுத்து விட்டதோ என்று எண்ணுகிறது பா.ஜ.க. தலைமை.

இதுதவிர சில தினங்களுக்கு முன்பு சென்னை வந்தார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத். அ.தி.மு.கவும், கம்யூனிஸ்ட்களும் சேர்ந்து மத்திய அரசின் முடிவுகள் பலவற்றை எதிர்க்கிறோம். அந்த வரிசையில் அ.தி.மு.கவுடன் சேர்ந்து பணியாற்ற முடியும் என்று நம்புகிறேன் என்று பேட்டியளித்தார். குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடி பிரசார நிமிர்த்தமாக தமிழகத்திற்கு வரும் வேளையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஏன் மார்க்ஸிஸ்ட் கமயூனிஸ்ட் தலைவர் பிரகாஷ் காரத்தை சந்தித்தார் என்ற கேள்வி பா.ஜ.கவின் மேலிடத் தலைவர்களுக்கு எழுந்தவண்ணம் இருக்கிறது. முதல்வர் ஜெயலலிதா - பிரகாஷ் காரத் அரசியல் சந்திப்பு பா.ஜ.க.விற்கு பாஸிட்டிவாகத் தெரியவில்லை. இது போன்ற சூழ்நிலையில் தமிழகத்தில் தங்களுக்கு என்று ஓர் அணி உருவாக்க வேண்டும். அதற்கு நடிகர் விஜய் போன்றவர்களை சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் பா.ஜ.க தலைவர்கள்.





அடுத்து நடிகர் விஜய் புதிய படம் எப்போது எடுக்கப் போகிறார்? என்பது மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கிறது. அதற்கு காரணம் அரசியல் அபிலாஷைகளில் இருக்கும் அவரின் படங்களை அமைப்புக்கள் சில ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி எதிர்க்கக் கூடும். அப்படி எதிர்க்கும் போது ஆட்சியிலிருக்கும் அ.தி.மு.க.வால் என்ன உதவி கிடைக்கும் என்பதெல்லாம் அவருக்கு தூக்கத்தைக் கலைக்கும் விடயமாகவே இருக்கிறது. சரி, நடிப்பு வேண்டாம். அரசியல் பக்கம் போய் விடுவோம் என்று நடிகர் விஜய் கருதினாலும், அதற்கு ஏற்றவாறு சூழ்நிலை இப்போது பா.ஜ.க.வில் மட்டுமே இருக்கிறது. அவரால் தி.மு.க பக்கம் போக முடியாது. அ.தி.மு.க.வையே மீண்டும் சப்போர்ட் பண்ணுவதில் தயக்கம் இருக்கும். காங்கிரஸ் பக்கம் போவது மூழ்கும் கப்பலில் பயணம் செய்வது போல் அமைந்து விடும். ஆகவே இப்போதைக்கு பயணிக்க பாத்திரமானது பா.ஜ.க கப்பல் மட்டுமே என்று நடிகர் விஜய் நினைப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நடிப்பு என்றாலும் சரி, அரசியல் என்றாலும் சரி நமக்கு முது கெலும்பாக இருப்பவர்கள் ரசிகர்கள். தலைவா பட விவகாரத்தில் நாம் அடித்த பல்டியில் அந்த ரசிகர்கள் சோர்ந்து போயிருக்கிறார்கள்.

அவர்களை தட்டி எழுப்பவாவது நாம் இப்போது நரேந்திரமோடி பக்கமாகப் போக வேண்டும் என்றே நடிகர் விஜய்க்கு அவரது நெருங்கிய வட்டாரம் அட்வைஸ் பண்ணுகிறதாம். அதனால் மோடிக்கு ஆதரவாக களமிறங்குவார் விஜய் என்பதே இப்போதைக்கு ஹாட் டாபிக்!

-எம்.காசிநாதன்- (முற்றும்)

# இலங்கைக்கு போர்க்கப்பல் வழங்கும் எண்ணத்தை மத்திய அரசு கைவிடவேண்டும்

## பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் அறிக்கை

(சென்னை)

**போர்க்குற்றம் புரிந்துள்ள இலங்கைக்கு போர்க் கப்பல்களை வழங்கிய நாடு என்ற அவப்பெயருக்கு இந்தியா ஆளாகிவிடக் கூடாதென பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையின் கடற்பரப்பைப் பாதுகாப்பதற்காக இரு போர்க்கப்பல்களை அந்நாட்டிற்கு வழங்க இந்தியா முடிவு செய்திருப்பதாகவும் கோவாவில் உள்ள அரசுக்கு சொந்தமான கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கப்பட்டுவரும் இந்த போர்க்கப்பல்கள் எதிர்வரும் 2017 மற்றும் 18 ஆம் ஆண்டில் இலங்கையிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடத்த போரின் போது ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். போர் முடிவடைந்து 4 ஆண்டுகளுக்கு மேலாகியும் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படவில்லை.

இலட்சக்கணக்கான தமிழர்கள் இன்னமும் வீடுகளின்றி, வாழ்வாதாரம் இல்லாது தவித்து வருகின்றனர்.

இலங்கைக்குச் சென்ற ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையை பெண்புலி என்றும் அவரை இராண்டாவது திருமணம் செய்து கொள்ளத் தயார் என்றும் கூறி இலங்கை அமைச்சர்கள் அவமானப்படுத்தியுள்ளனர்.

போர்க்குற்றம் குறித்து விசாரிக்கச் சென்ற ஒரு பெண்மணியை அவர் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இழிவுபடுத்திய இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். பொதுநலவாய தலைவர்கள் அமைப்பிலிருந்தும் நீக்க வேண்டும் என்று தமிழக மக்கள் வலியுறுத்தி வரும் நிலையில், இலங்கைக்கு 2 போர்கக் கப்பல்களைப் பரிசளிக்க இந்தியா தீர்மானித்துள்ளது.

தமிழர்களின் உணர்வுகளைமதிக்காது மத்திய அரசு செயற்படுவது வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதைப் போன்று அமைந்திருக்கிறது.

வங்கக் கடலில் மீன் பீடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை சட்டவிரோதமாக கைது செய்து இந்தியாவுடன் அறிவிக்கப்படாத போர் ஒன்றை இலங்கை நடத்தி வருகிறது.

இவ்வேளை, இலங்கையின் கடல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதால், அந்த நாட்டிற்கு போர்க்கப்பல்களை வழங்கவுள்ளதாக மத்திய அரசு கூறுவது வேதனை அளிப்பதுடன் நகைச்சுவையாகவுமுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இலங்கைக்கு அருகில், இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் இல்லை. இந்தியப் பெருங்கடற் பகுதியின் பாதுகாப்பை இந்திய கடற்படை கவனித்துக் கொள்கிறது. இந்நிலையில் இலங்கை கடற் பகுதிக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக மத்திய அரசு கூறுவதை ஏற்க முடியாது.

இதற்கு முன்பு கடந்த 2007 ஆம் ஆண்டில் இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான சி.ஜி.எஸ். வராஹா, சி.ஜி.எஸ்.விக்ரஹா என்ற இரு போர்க்கப்பல்களை இலங்கைக்கு இந்தியா குத்தகையாக வழங்கியது.

2009 ஆம் ஆண்டு போரின் போது, தமிழினத்தை வீழ்த்துவதில் இந்த இரு கப்பல்களும் முக்கிய பங்குவகித்தன. இப்போது இலங்கைக்கு எந்தவிதமான பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லாத நிலையில், இலங்கைக்கு போர்க்கப்பல்களை இந்தியா வழங்குவது தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு மட்டுமே பயன்படும்.

தனது சொந்த நாட்டு மீனவர்களை தாக்குவதற்காக அயல் நாட்டிற்கு போர்க்கப்பல்களை வழங்கிய நாடு என்ற அவப்பெயருக்கு இந்தியா ஆளாகிவிடக் கூடாது.

இந்தியா மீது கடல் வழியாக தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு இலங்கை துணை போவதாக கூறப்படும் இந்நிலையில், அந்நாட்டிற்கு போர்க்கப்பல்களை வழங்கினால் அது இந்தியாவின் பாதுகாப்பிற்குத்தான் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

எனவே, இலங்கைக்கு போர்க்கப்பல்களை வழங்கும் முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும். இலங்கைக்கு எதிராக போர்க்குற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு பதிலாக போர்க்கப்பல்களையும் ஆயுதங்களையும் வழங்குவதை தொடர்ந்தால் மத்திய அரசுக்கு எதிராக தமிழக மக்கள் கொந்தளிக்கும் நிலை ஏற்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ம.உ.கண்காணிப்பகத்தை கணக்கில் எடுப்பதில்லை

## இப்படி கூறுகிறார் கெஹலிய

(கொழும்பு)

ஐநாமனிதஉரிமைஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்தித்தவர்கள், இலங்கை பொலிஸாராலும் இராணுவத்தினாலும் அச்சுறுத்தப்பட்டதற்கு அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்று அரசாங்கம் கூறியுள்ளது.

தன்னைச் சந்தித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்று நவநீதம்பிள்ளை அண்மையில் கொழும்பில் வைத்து செய்தியாளர்களிடம் கூறியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று, நியூயோர்க்கைதளமாககொண்ட மனித உரிமைகள் கண்காணிப் பகம் நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்நிலையில், நவநீதம்பிள்ளையின் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள இலங்கை அரசின் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, கூறுகையில்,

ஆதாரங்களின்றி பொதுமக்கள் சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பாக நவநீதம்பிள்ளை கருத்து தெரிவிக்கக் கூடாது. நவநீதம்பிள்ளையை சந்தித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டிருந்தால், அது குறித்து பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்திருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அதன் மீது, விசாரணைகளை நடத்தமுடியும். ஆனால், பொலிஸாரிடம் எந்தமுறைப்பாடுகளும் செய்யப்படவில்லை.


இது தொடர்பான அதிகாரிகளிடம் இதுகுறித்து நவநீதம்பிள்ளை விசாரித்ததாகவும் எனக்குத் தெரியவில்லை.

சிலர் தன்னிடம் கூறியதாக மட்டுமே அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை நாம் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

அவர்கள் எப்போதும் பக்கச்சார்புடையவர்களாகவே செயற்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



இலங்கை நூலக சேவை செய்து இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர் சாமஸ்ரீதேசஜோதி ஏ.என்.எஸ். திருச்செல்வம் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கை பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறைக் கிளை உபசெயலாளராகவும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திக் குழு, வடமராட்சி வடக்கு கலாசார பேரவை, தென்னாசிய சுதந்திர ஊடக அமைப்பின் இலங்கைக்கிளை ஆகியவற்றின் உறுப்பினராகவும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வட பிராந்திய இணைப்பாளராகவும் சேவையாற்றிவருகின்றார். (அ)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட விடுதி கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் கட்டடத்தை திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

## ஸ்ரோபரி செய்கை பரீட்சார்த்தமாக வெற்றி



அளவெட்டியைச் சேர்ந்த குணசிங்கம் புவிந்தன் என்ற இளைஞர் ஸ்ரோபரி பயிர்ச்செய்கையை பரீட்சார்த்தமாக மேற்கொண்டு, அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

குளிர்கால காலநிலைக்குரிய பயிரான ஸ்ரோபரி மிதமான வெப்ப வலயமான யாழ்ப்பாணத்தில் விளைச்சலைத் தந்துள்ளதுமை தனக்கு நம்பிக்கை தருவதாகவும் தொடர்ந்து வர்த்தக நோக்கில் இவ்வாறான முயற்சிகளைத் தான் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2-9-23)

## யோகா கலை அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். யோக அரங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் யோகக் கலைப்பணியின் புதிய பயிற்சி நெறி அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன், சிறப்பு விருந்திறாக அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மட நிர்வாகி தருமராசா மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதோடு, கௌரவ விருந்தினராக கவிஞர் நெடுந்தீவு முகிலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது மூத்த யோகாசன ஆசான் எம்.இரத்தினசோதி வழங்கும் யோகக்கலை நுட்பங்கள் எனும் தொனிப் பொருளிலான சிறப்புரையும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, வழக்கமான யோகக் கலைப் பயிற்சி வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 6 மணிக்கும் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் அதிகாலை 5.30 மணிக்கும் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# இந்தியாவின் கப்பல்களைக் கொண்டே தமிழக மீனவர்கள் தாக்கப்படுவர்

## கலைஞர் கருணாநிதி

இந்தியா வழங்கவுள்ள கப்பல்களைக் கொண்டே இலங்கைப் படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்குதலை நடத்துவர் என்று தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு இந்தியா இரண்டு கப்பல்களை நிர்மாணித்து வழங்கவுள்ளதாக வெளியான செய்தி தொடர்பிலேயே கருணாநிதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைக்கு இரண்டு போர்க் கப்பல்களை வழங்கும் இந்திய மத்திய அரசாங்கத்தின் திட்டத்தினால் இலங்கைத் தமிழர்களுக்கோ இந்திய மீனவர்களுக்கோ எதுவித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை.

அது இலங்கை அரசாங்கத்துக்கு மாத்திரமே நன்மை பயக்கும் என்று தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியா வழங்கவுள்ள கப்பல்களைக் கொண்டே இலங்கைப் படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்குதலை நடத்துவர் என்பது உறுதி.

எனவே இந்தியா இந்தத் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை 2009 ஆம் ஆண்டின் இறுதிப்போரின்போது இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு உதவியதாக வெளியான தகவலைத் தமது கட்சி நம்பவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



இலங்கைக்கு வருகை தந்துள்ள ஈராக் தொழில் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வியாழக்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினார். இந்த சந்திப்பில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், டிலான் பெரேரா, காமினி லொக்குகே மற்றும் இலங் கைக்கான ஈராக் தூதுவர் கதான்தாஹா கல்லாப் ஆகியோர் பங்கேற்றதைப் படத்தில் காணலாம்.

# யாழ்.ஓசை பெரு விழாவில் கலைஞர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினால் நடத்தப்படும் யாழ். ஓசைப் பெருவிழா, இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் நாட்டியப் பேராசான் கலைஞர் வேல் ஆனந்தனின் நெறியாள்கையில் வவுனியா மாவட்ட ஆடல் அணியினரால் வழங்கப்படும் குருஷேத்திரம் எனும் கீழைத்தேய ஆடற்கதையும் திருமதி கோகிலத்வனி விஜயராகவன் வழங்கும் வீணாகானம் நிகழ்வும் அத்துடன் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்படும் கலைஞர்கள் விபரம் பின்வருமாறு.

**ஆடற்கதை:** வேல் ஆனந்தன். **மிருதங்கம்:** சின்னராசா, சிதம்பரநாதன், துரைராசா. **நாதஸ்வரம்** கே.எம்.பஞ்சாபிகேசன், இராசுசுந்தரமூர்த்தி, பி.ரஜீந்திரன், வ.குமாரசுவாமி, **வயலின்:** கி.பத்மநாதன், திருமதி பாக்கியலட்சுமி நடராஜா, த.சிதம்பரநாதன். **பாட்டு:** பொன். சிறி. வாமதேவன், செ.குமாரசுவாமி, **தவில்:** ந.நந்தகுமார், ச.முருகையா, த.உதயசங்கர், **புகைப்படம்:** ச.கதிரவேலு, **நடனம்:** திருமதி சாந்தினி சிவநேசன், திருமதி பத்மினி செல்வேந்திரகுமார். **ஓவியம்:** வை.சிவசுப்பிரமணியம், ஆசை இராசையா. **ஓவியம்/ சிற்பம்:** அன்ரன் யோசேவ், சிவப்பிரகாசம். **ஆர்மோனியம்:** மு.சடாச்சரம், வ.பன்னிருகையா. **மோர்சிங்:** செ.ராசா. **வசந்தன் கூத்து:** மு.சிவப்பிரகாசம். **ஒப்பனை:** எஸ்.ஐயாத்துரை, திருமதி சண்முகநாதன் யோகினி. **பண்ணிசை:/பாட்டு** கலா பூஷணம். எஸ். கணபதிப்பிள்ளை, பா. சபாபதிப்பிள்ளை, சறோஜா தம்பு. கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தன், வி.சிவஞானசேகரம், **வீணை:** திருமதி கோகிலத்வனி விஜயராகவன், விஜயலட்சுமி சண்முகராசா, திருமதி குமுதா உமாகாந்தன், **சிந்துநடைக் கூத்து:** க.இளையதம்பி. **இசை,நாடகம்:** மா.சீவரத்தினம், **பாடகன், இசையமைப்பு:** க.யோகேஸ்வரன், **புல்லாங்குழல்:** சி.திலோசன், ப.பத்மராஜ் **மெண்டலின்:** வி.சிவகுமார்சர்மா, சி.தினேஷ் **நாடகத் துறை:** கி.பிலிப் பேர்மினஸ் , **நாடகம், நாட்டுக்கூத்து, இசைநாடகம்:** பி.யூல்ஸ் கொலின், **நாடகம், இசை, நாட்டுக்கூத்து, இசைநாடகம்** அ.விஜயகுமார், **இசை நாடகம்** மா.தைரியநாதன், **இசைத்துறை:** ம.யேசுதாசன், **நாட்டுக் கூத்து:** அ.பேக்மன் ,வ.யேக்கப். **வில்லிசை:** இராசையா ஸ்ரீதரன், **நடனம் (கதகளி)** பா.வின் சென்ற் ஆகியோ ருக்கு விருதுகள் அறிவிக் கப்பட்டுள்ளன. (அ-5)

# இராணுவத்தை குறைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு

(கொழும்பு)

வடக்கில் தெரிவு செய்யப்படும் முதலமைச்சரினால் அங்குள்ள இராணுவத்தைக் குறைக்க முடியாது. அந்த அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாகவும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தும் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மக்களின் தேவையைப் புறக்கணித்து சர்வதேச மட்டத்தில் ஒருசில தரப்புக்களின் தேவையை நிறைவேற்றும் நோக்கிலேயே கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் மீண்டும் சர்ச்சையை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்தவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்துள்ளது.

வடக்கில் தெரிவு செய்யப்படும் முதலமைச்சரினால் அங்குள்ள இராணுவத்தைக் குறைக்க முடியாது. அந்த அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. பாராளுமன்றத்துக்குக்கூட அது தொடர்பான அதிகாரம் கிடையாது.

உண்மையில் வடக்கு மக்களின் தேவையை நிறைவேற்றுவதாயின் கல்வி, சுகாதாரம், பொருளாதார அபிவிருத்தி, வீடு, போக்குவரத்து, மின்சாரம், பல்கலைக்கழக வசதி உள்ளிட்ட விடயங்களையே முன்வைக்க வேண்டும். அதனைவிடுத்து வடக்கில் இராணுவத்தை தறைக்கப்போவதாக பிரகடனத்தில் கூறியுள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுப்பதாக கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டியது யார் என்பதையும் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்றார். (அ-2)

# அங்கத்தவர்களை இணைத்தல்

(கரணவாய்)

கெருடாவில் விவேகானந்தா சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக சங்கத் தலைவர் அரசரத்தினம் அறிவித்துள்ளார்.

இதில் கெருடாவில், தொண்டைமானாறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள முடியும்.

இச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் மாதாந்த சேமிப்பை ஏற்படுத்தி இலகு கடன் திட்டங்களைப் பெற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும்படி தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-9-60)

# ஐ.நா.மனிதவுரிமை மாநாட்டில் உயர்மட்டக்குழு பங்கேற்காது?

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைப் பேரவை மாநாட்டில் உயர்மட்டக்குழு பங்கேற்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை முதல் 27 ஆம் திகதி வரையில் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இலங்கையின் சார்பில் உயர்மட்டக்குழுவொன்று பங்கேற்காது என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் இலங்கையை பிரதிநிதித்துவும் செய்யவுள்ளனர்.

இதற்கு முன்னர் மனித உரிமை விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான உயர்மட்டக் குழுக்கள் மாநாட்டில் பங்கேற்றிருந்தன .வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் பங்கேற்றிருந்தார். எனினும் இம்முறை மாநாட்டில் இலங்கையின் சார்பில் முக்கியஸ்தர்கள் எவரும் பங்கேற்றப் போவதில்லை

இதேவேளை, அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கை குறித்த விசேட உரையையும் ஆற்றவுள்ளார்.

இலங்கை குறித்த வாய்மொழிமூல அறிக்கையாக இது அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது. (அ-2)


வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
19
தாயக அபிவிருத்திக்காய்!
தமிழரின் அபிலாசைகளுக்காய்!!
இளைஞரின் எதிர் காலத்திற்காய்!!!

தீவகத்திலிருந்து மணங்கும்பான்
சுவாமிநாதன் பிரகலாதன்
(பிரபு)
சுயேட்சைக் குழு 7 - இளைஞர் அணி
X
யாழ்.மாவட்ட
இளைஞர் சக்தியை
எட்டு மாகாணமும்
பறைசாற்றுவோம்
(E-032)



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - யாழ் மாவட்டம்
தேசியம்
சூழலியம்
சுய நிர்ணயம்
தமிழ்த் தேசிய அரசியலில்
இன்று
ஒரு சூழலியலாளனும் தேவை.
நம்பிக்கைக்குரிய தெரிவு
பொ.ஐங்கரநேசன்
M.Sc,PGDJMC

2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - இலங்கைத் தமிழரசுக் கட்சி
(EC/4979)

# தீ வைக்கப்படாத போட்டி என்ற பெயரில் மற்றொரு விபரணப்படம் தயாராகிறது

## மெக்ரே தயாரிக்கிறார் என்கிறது லங்காதீப

(கொழும்பு)

**இலங்கையின் இறுதிக் கட்ட போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை வெளிச்சம் போட்டு காட்டும் இலங்கையின் கொலைக்களம், போர் தவிர்ப்பு வலயம் ஆகிய விபரணப் படங்களை வெளியிட்ட கெலம் மெக்ரே மற்றுமொரு படத்தை உருவாக்கியுள்ளதாக லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கை இராணுவத்தையும் அரசாங்கத்தையும் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தி இறுதிக் கட்ட போரில் இடம்பெற்ற சம்பவங்களை உள்ளடக்கிய தீ வைக்கப் படாத போட்டி என்ற பெயரில் புதிய விபரணப்படத்தை அவர் தயாரித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த விபரணப்படத்தை தயாரிப்பதற்கான பணத்தை புலம் பெயர் தமிழர்களுடன் இணைந்து செயற்படும் சில பிரித்தானிய நாடாளுமன்ற பிரதானிகளும் வர்த்தகர்களும் வழங்கியிருப்பதாக தெரியவருகிறது என லங்காதீப இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் ஒரு மணிநேரம் ஓடும் இந்த விபரணப்படம் அண்மையில் சனல் 4 தொலைக்காட்சியில் ஒளி பரப்பானது. எனினும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இலங்கை இராணுவத்தினர் செய்ததாககூறப்படும் கொடூர கொலைகள் தொடர்பான காட்சிகள் இந்த படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தற்போது சுவிட்சர்லாந்து, கனடா, லண்டன் ஆகிய நாடுகளுக்குசென்று அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ள இராணுவ அதி காரிகளிடம் இருந்து இந்த காட்சிகளை பெற்றுக் கொண்டதாக மெக்ரே, கார்டியன் பத்திரிகையிடம் கூறியுள்ளார்.

இந்த அதிகாரிகளின் கையடக்கத் தொலைபேசிகளிலுள்ள கமராக்களில் மேற்படி காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. போரில் 70 ஆயிரம் தமிழ் பொது மக்கள் கொல்லப்பட்டதாக இந்த படத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும் இலங்கை அரசாங்கம் அதனை மறுத்துள்ளது. (அ-2)

# 23 வருடங்களின் பின்னர் மயிலிட்டியில் வழிபாடு



இருபத்துமூன்று வருடங்களின் பின்னர் மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடத்திற்குச் சென்று அங்குள்ள ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த கிராமத்திற்கு நேற்று முன்தினம் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

மயிலிட்டி பகுதியிலுள்ள வீரமாணிக்க தேவன்துறை கண்ணகி அம்மன், முனையன் வளவு முருகன், மருதடி விநாயகர் ஆகிய ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக மாவிட்டபுரத்திலிருந்து தனியார் பேருந்துகளில் மக்கள் சென்றிருந்தனர். அப்பொழுது மாவிட்டபுரத்திற்கு வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மயிலிட்டி பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

மேற்படி மூன்று ஆலயங்களிலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் பொங்கல் மற்றும் அன்னதான நிகழ்வுகளை முன்னெடுத்ததுடன் சிறப்புப் பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் ,

இதுவொரு முதற்கட்ட முயற்சியாகும். எதிர்காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோருடன் கலந்துரையாடி குறித்த பகுதியை மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (அ-2)

# மக்கள் யுத்தத்தை எதிர் கொண்டாலும் கலாசாரத்தை கைவிடவில்லை

## திரை இசை பின்னணி பாடகி ஸ்ரீமதிசுதா



(யாழ்ப்பாணம்)

யுத்தப் பாதிப்புக்களை இலங்கையின் வடபகுதி மக்கள் எதிர் கொண்ட போதிலும் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கலாசாரம் மக்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளது என இந்தியாவின் புகழ் பெற்ற கர்நாடக சங்கீத இசைக் கலைஞரும் திரையிசைப் பின்னணிப் பாடகியுமான ஸ்ரீமதி சுதா ரகுநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து நிகழ்வுகளில் பங்கு கொள்ள இந்தியக் கலைஞர்கள் ஆர்வமாகவுள்ளனர் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடகாலமாக இலங்கையில் யுத்தம் இடம்பெற்று வந்தது. இந்தக் காலப்பகுதியில் கூட யாழ்ப்பாணத்தின் கலாசாரம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் இங்கு வாழ் மக்கள் மனங்களில் கலாசாரம் ஆழமாக வேரூன்றி இருப்பதேயாகும்.

இருப்பினும் பாடசாலை மட்டங்களிலும் ஏனைய துறைகள் ஊடாகவும் இன்னும் அதனை வளர்த்தெடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இசை உள்ளிட்ட கலாசார நிகழ்வில் பங்குகொள்ள இந்தியக் கலைஞர்கள் என்றுமே ஆர்வமாகவும் தயாராகவும் உள்ளனர்.

கலையை ரசிக்க வேண்டும் என்கிற ஆர்வம் இங்குள்ள மக்களிடையே அதிகமாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கலைகளை நாம் மட்டும் வளர்க்க முடியாது. கலையை வளர்ப்பதற்கு உதவியாக மட்டும் எம்மால் இருக்க முடியும்.

அதற்குஎம்மால்எவற்றைச்செய்ய முடியும் என்பது பற்றி மட்டுமே ஆராய முடியும். ஆனால் யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களே கலைகளை வளர்க்க அதிகம் முயற்சி எடுக்க வேண்டும். அதற்கான ஒத்துழைப்பை நாம் வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில் இந்தியப் பரத நாட்டிய கலைஞர் ஸ்ரீமதி லீலா சாம்ஸன் மற்றும் கர்நாடக சங்கீத கலைஞர் ரி.எம்.கிருஷ்ணா ஆகியோரும் பங்குகொ ண்டு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். (அ-6)

# உண்மையான செய்திகளை வெளியிட்டால் ஆபத்து

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் கடத்திச் செல்லப்படும் சம்பவங்கள், காணாமற்போகும் சம்பவங்கள் மற்றும் கொலை செய்யப்படும் சம்பவங்களின் பின்னணியில் பயங்கரவாதிகள் இல்லை என்பது தெளிவாகியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற 200 கிராமிய பெண்களுக்கு வட்டியில்லா சுயதொழில் கடனுதவிகளை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையானசெய்திகளைவெளியிடும் ஊடகவியலாளர்களுக்கு நாட்டில் மிகவும் ஆபத்தான நிலைமை காணப்படுவதுடன் அவர்கள் ஆபத்தான நிலைமைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஊடக சுதந்திரம் என்பது வார்த்தையில் மட்டுமே உள்ளது. அரசாங்கத்தை சிரமத்திற்கு உள்ளாக்கும் செய்திகளை வெளியிடுவது என்பது வாழ்வுக்கும் மரணத்திற்கும் இடையிலான போராட்டம்.

ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவதும் காணாமற் செய்யப்படுவதும் கொலை செய்யப்படுவதும் எவருடைய தேவைக்காக மேற்கொள்ளப் படுகிறது என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

நாடு ஒன்றில் ஊடகவியலாளர்கள் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதற்காகவே உள்ளனர். அவர்கள் இருப்பது ஆட்சியாளர்களை திருப்திப்படுத்துவதற்காக அல்ல என்றார். (அ-2)

# இந்திய மீனவர்கள் 14 பேர் விடுவிப்பு

(சென்னை)

இலங்கை சிறையிலிருக்கும் காரைக்கால் மீனவர்கள் 29 பேரில் 14 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 30,31 ஆம் திகதிகளில் காலைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவக் கிராமங்களிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் 29 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். அத்துடன் மீனவர்களின் விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பலமுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டும் விடுதலை கிடைக்கவில்லை. பின் கடந்த புதன்கிழமை தமிழக மீனவர்களுடன் காரைக்கால் மீனவர்கள் 14 பேர் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களை நீதிமன்றம் விடுதலை செய்தது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு போட்டிகள்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவிருக்கும் போட்டியில் வெற்றியீட்டுபவர்கள் வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படுவரென கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை பொதுநலவாய உச்சிமாநாடு மற்றும் அதனுடன் ஒத்ததாக இளைஞர் பேரவை, மக்கள் பேரவை மற்றும் வர்த்தக பேரவை ஆகியனவும் இடம் பெறவுள்ளன. இவற்றுடன் தொடர்பு பட்டதாகவே பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, சித்திரம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இது தொடர்பிலான முழு விபரங்களும் உள்ளடக்கப்பட்ட சுற்றுநிருபம் கல்வியமைச்சினால் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்திலான போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறும். அதில் வெற்றி பெறுபவர்கள் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும். தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றுவோர் தமது பாடசாலை ஊடாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதிக்கு முதல் பெயர் விபரங்களை கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் கல்வியமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (அ-2)

# இலங்கையர்களுக்கு ஈராக்கில் புதிய தொழில்வாய்ப்புக்கள்

ஈராக்கில் தொழில், தொழிற்பயிற்சி வாய்ப்புக்களை இலங்கையர்களுக்கு அதிகமாகப் பெற்றுக் கொடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலன்புரி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையின் சார்பில் அமைச்சர் டிலான் பெரேராவும் ஈராக்கின் சார்பில் அந்நாட்டு தொழில், சமூக நடவடிக்கை அமைச்சர் நஸார் அலி ரூபையும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டனர்.

இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புக்களை அதிகமாக பெற்றுக்கொள்ளும் அமைச்சரின் கோட்பாட்டின் பேரில் இரு நாடுகளின் அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தையில் ஈராக்கில் நிர்மாண, விவசாயக் கைத் தொழிற்றுறைகளில் நாட்டம் செலுத்துவது பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சின் செயலர் கர்னல் நிஸ்ஸாட் என்.விஜேரத்ன, இலங்கையிலுள்ள ஈராக் தூதுவர் கே.ரீ. கஹலிப், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தலைவர் அமல் சேனாலங்காதிகார ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (அ-2)

# கவிதைக் கலசம்



## வாழ்க்கை என்றால்

வாழ்க்கை என்கின்ற ஓடம்!- அது
நல்ல மனிதர்களுக்கான ஓர் பயணம்!
கணவன்- மனைவி ஒரு பந்தம்!- அதுவோ
குடும்பம் என்னும் ஓர் கோயில்!

நான்குபேர் போற்றுகின்ற வாழ்வே!- அது
நல்ல பண்பான மனிதனின் வாழ்க்கை
எப்படியும் வாழலாம் என்பதை விட்டு!- நீ
இப்படித்தான் வாழனும் என்பதே வாழ்க்கை!

கவலையற்ற வாழ்வுக்கு கௌரவம் தேவை!
ஆனால் சுய கௌரவம் அதுவே முக்கியமாகும்!
எவனைப் போல் நீ வாழ நினைப்பாயேயானால்
அது - போலி வறட்டுக் கௌரவம்

மனிதம் என்பது உலகில் புனிதம் ஆகும்
அதை மதித்து நடந்தால் புகழும் சேரும்
சீராய் வாழ்ந்தால் மானிலம் போற்றும்
சிறப்புடன் வாழ்வதே வாழ்க்கைப் பயணம்!

கணபதி முத்துராசா
கட்டைக்காடு

## நிலவில் எழுதுகிறேன்

உன் நினைவின் கவிதைகளை
உலக அழகை அள்ளி விரியும்
உன் அழகு கண்ணின் ஒளியில் நனைத்து
நிலவில் எழுதுகிறேன்.

கனவின் வர்ணங்கள் அலையும் முகிலின் தூரிகையால்
தாரகை சேர்ந்து மின்னும் வேளை
அழகு தமிழில்.....
நிலவில் எழுதுகிறேன்

உயிரில் தீயை பற்றவைக்கும் உனது புன்னகையை
செவ்வான சிகப்பை பூசி சிவக்கும்
கன்னத்தாமரையை....

பகலில் கூட இரவைக் கூட்டும்
கூந்தல் காடுகளை....

இனிய தமிழில் கவிதையாக்கி
நிலவில் எழுதுகிறேன்
நிலவின் தமிழ் படிக்க
விண்ணில் கூட்டம் சேர்ந்திடுமோ
கடலின் அலைகள் எழுந்து உயர்ந்து
கவிதை படித்து மீளுமோ

உன் கண்கள் சொன்ன அழகு கவிதை
நிலவில் நின்று ஒளிருமோ
எனது தமிழும் உனது அழகும்
உலகில் என்றும் வாழுமோ

வேலணையூர்- தாஸ்

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
அடிக்கடி மணிபார்த்தபடி
நிக்கிறான் வீதியில்
பேருந்துகளை விலக்கிவிட்டு
சிற்றூர்தியில் தொங்கி ஏறி
பாட்டும் பகிடியுமா
பலவகைக் கதைகளுடன்
தூங்குகின்றான் மந்திபோல்
தருணம் தப்பினால்
மரணமென்பதறியாமல்..

மாவை.நா.கஜேந்திரன்

## முகம் காட்டி சுகம் கேட்பார்

கும்பிடும் கரங்களோடும்
கூடிடும் தொண்டரோடும்
தென்றலாய் தீண்டி எம்மை
திடுக்கிட வைத்து விட்டார்
இன்சொல்லால் அழைத்து
புன்னகை மன்னனாய்
எம்முன்னே நின்று
பலகதைகள் சொல்லிடுவார்
நவரச நாயகனை
நடிப்பால் மிஞ்சிடுவார்
பொன்மனச் செம்மலாகி
பொருளுதவி புரிந்திடுவார்
விண்ணதிரக் குரல் கொடுப்பார்
விடிவெள்ளி நான் என்பார்
விளம்பரத்தில் முன்நிற்பார்
தேர்வதனில் தேறிவிட்டால்
கையசைப்பார்- கைகொடுத்து
கட்டியணைத்திடுவார்
மங்களமாய் வாழ்வீர் என்று
மனம்மகிழக் கூறிவிட்டு
பறந்திடுவார் எம்மை மறந்திடுவார்
நாலாண்டு நலமாய் இருந்துவிட்டு
சொகுசுக் காரில் வந்திறங்கி
முகம்காட்டி- சுகம்கேட்பார்

நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.




## மௌனத்தின் தேடல் - 169



### உறவுகளே நில்லும்

இப்படி ஆனது எங்களின் குற்றமா?
தப்படி தருவதாய் உங்களில் விலக்கினீர்
எங்களின் உணர்வுகள் தங்களைப் போன்றதே
ஏங்கிடும் எம்மையும் ஈரமாய் நோக்கிடும்

சோ. றோகன்,
சண்டிலிப்பாய்.

### தேவை

பிறப்பினால் ஊனமுற்றோம்
போரினால் ஊனமுற்றோம்
எமக்கு தேவை அரிசி அல்ல
உரிமையே!

ச.சிவரூபன்,
சாவகச்சேரி.

### எழுவோம்

அங்கவீனம் என்பது
மனிதனின் தீய குணங்கள்
கைவிடப்பட்டவர்கள் நீங்களல்ல
பலரை கைதூக்கப் பிறந்தவர்கள்
சாதிக்கப் பிறந்தவர்கள்
சாவதில்லை
நீங்கள் மாற்றுத் திறனாளிகளல்ல
இவ் உலகை மாற்றப்
பிறந்த திறனாளிகள்

க.கபில்ஸ்ரன்

### வழிகாட்டுவோம்

துன்பதுயரங்களையும் சமூக
ஏற்றத் தாழ்வுகளையும் நீக்கி
இன்முகத்தோடு யாவரையும்
அன்போடு அரவணைத்து
நன்றே வாழ்வது தான் மனிதப்பண்பு
ஊனம் ஒரு குறையல்ல அவர்களும்
என்றும் எம்மோடு இணைந்து
மானத்தோடு வாழ வழிகாட்டுவோம்

துரை,
தென் மட்டுவில்

### மீள் தரிசனம்

அன்புக்குரியவனே!
உனது கால்பதிப்பின்
உறுதி
இன்னோர் புத்தெழுச்சிக்கான
மன உறுதி
என் அவா
உன்முன் உணர்விழந்து
வலுவிழந்து மண்டியிடுவோர்
மீள் எழுச்சியும்
தேவை அவர்க்கு
உன் மீதான
மீள் தரிசனம்

க.ஞானசிலன்,
கொற்றாவத்தை.

### கை கொடுப்போம்

சோகங்களைத் தாங்கி
பேதங்களை மறந்து
மணல் வீடு கட்டும்- நம்
நாளைய தலைமுறைக்கு
நல்வழிகாட்ட வாரீரோ...!

உதயம் ரூபன்,
நயினை

### கதை மாறி விடும்

மாற்றம் வேண்டி
மாற்றுத் திறனாளிகள்
ஆற்றாமையை விரட்டி
ஆற்றும் கருமங்களை
விலைவாசி புரியாமல்
கவலையின்றி வீதிகளில்
பியர் ரின்களைக் குவிப்போர்
கவனித்தால் நிச்சயம்
கதை மாறி விடும்

க.நாகராசா,
சாவகச்சேரி.

### ஊனம்

ஊனம் என்பது உடலில் தான்
எம் உள்ளங்களில் இல்லை
என்பதை உணர்ந்தவர்கள் இவர்களே!

றாபி விமலதாஸ்,
நவாலி.

### ஏக்கம்

எனக்கோ ஒரு காலில்லை
விளையாடக் கேட்டேன்
வரவில்லை
உலகத்தை அளிப்பதற்கோ
புதிய திட்டம் தீட்டிக்
கொண்டிருக்கின்றார்கள்
இந்த விதி இவர்களை ஒன்றும்
பண்ணிவிடாதா

எஸ்.எம். பிரதீபன்
தலைமேடை

### திறமைசாலிகள்

எம் உடலில் ஊனமாயினும்
எம்மிடமும் பல திறமைகள்
ஒளிந்துள்ளது
என்பதை இங்கே நாம்
நிரூபிக்கின்றோம்

க.ஜெயரூபன்,
பருத்தித்துறை

### மறுமலர்ச்சி...?

ஊனம் என்ன உடலிலன்றோ
உளம் வலிமை குன்றவில்லைதானே
ஈனர்கள் வாழும் உலகைவிட்டு
இங்கு வந்ததுவும் நல்லதுதானே!
கனம் கொண்ட மனந்தனை
காப்பகம் நீக்கிடும்தானே!!
மனம் வலிமை கொண்டீரே இனி
மறுமலர்ச்சி ஒன்றுதானே!!!


பொ.புனிதன்
வரியப்புலம்.

### மனத்திருப்தி

உடல் பலமும்
உளப் பலமும்-எங்களின்
மனங்களில் உள்ளவரைக்கும்
நாங்கள் என்றுமே!
ஊனமில்லை- இந்தப் பூமி
உள்ளவரைக்கும் எம்மைப் போல்
உள்ள அத்தனை ஜீவன்களும்!

எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -170




### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 12.09.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -

# ஐ.நாவின் அனுமதி பெற்ற பின்னர் சிரியா மீது தாக்குதல் நடத்துக

## ஜி-20 மாநாட்டில் மன்மோகன் வலியுறுத்து

(சென்பீட்டர்ஸ்பேர்க்)

**ஐ.நா.அனுமதியில்லாது சிரியா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதை இந்தியா எதிர்க்கும் என்று ஜி-20 மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் உறுதிப்பட தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்பேர்க் நகரில் ஜி-20 மாநாடு நடைபெற்று வருகிறது.**



இந்த கூட்டத்தில், சிரியாவின் உள்நாட்டு போர் குறித்தே பெருமளவில் விவாதிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில், பிரதமர் மன்மோகன் சிங் உரையாற்றுகையில், "ஐ.நாவின் அனுமதி இல்லாது சிரியா மீது இராணுவ நடவடிக்கை கூடாது. இதுபோன்ற செயல்களை இந்தியா எதிர்க்கும்" என்று கூறியுள்ளார்.

பிரதமருடன் சென்றுள்ள, மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா பிரதமரின் பேச்சு குறித்து அளித்த பேட்டியில் கூறியதாவது,

சிரியாவில் இரசாயன குண்டுகள் வீசப்பட்டனவா? என்பது குறித்து, அங்கு சென்று ஆராய்ந்த ஐ.நா. கண்காணிப்பாளர்கள் தங்களுடைய அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளனர். அதன் அடிப்படையில் ஐ.நாவின் அனுமதியை பெற்றே சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவரை உலக நாடுகள் காத்திருக்க வேண்டும் என்பதே பிரதமர் மன்மோகன் சிங்கின் நோக்கம்.

சிரியா மீதான தாக்குதல் அவசியம் என்றால், அதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபை ஒப்புதல் அளிக்கவேணடும் என்றும் பிரதமர் கூறியுள்ளார். இந்த கூட்டத்தில், சிரியாவில் தற்போதுள்ள நிலைமை குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஜி-20 மாநாட்டின் தலைவர்களுக்கு விளக்கினார். இவ்வாறு அலுவாலியா கூறினார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியமைக்கு கண்டனம் தெரிவித்தார்.

*எந்த முடிவும் எட்டப்படவில்லை*

சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஜி -20 மாநாட்டில் நடந்த ஆலோசனையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. மாநாட்டுக்கு இடையே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை, ரஷ்ய ஜனாதிபதி புடின் சந்தித்து பேசினார். பின்னர் புடின் கூறுகையில், "சிரிய விவகாரத்தில் தங்களுக்கு இடையிலான வேறுபாடுக்கு தீர்வு ஏற்படவில்லை" என்றார்.

இம் மாநாட்டில் கலந்து கொண்ட சர்வதேசத் தலைவர்களும் சிரிய விவகாரம் குறித்துப் பேசினர்.

அவர்கள், சிரியா மீது அமெரிக்கா தன்னிச்சையான முறையில் தாக்குதல் நடத்தக் கூடாது என்று ஒபாமாவை வலியுறுத்தினர்.

சிரியா மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அது, உலகப் பொருளாதாரத்தை பாதிப்பதோடு, எண்ணெய் விலைகளையும் உயர்த்திவிடும் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்,

சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அது சர்வதேச சட்டத்துக்கான சவப்பெட்டியின் மீது அடிக்கப்பட்ட மற்றொரு ஆணியாக இருக்கும். இந்த விவகாரத்தில் ஜி -20 நாடுகளின்தலைவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. ஜி- 20 அமைப்பின் உறுப்பு நாடுகளைப் பொறுத்தவரை, சிரியா மீதான நடவடிக்கையை ஆதரிக்கும் நாடுகளை விட, எதிர்க்கும் நாடுகளே அதிகம் என்றார். ஜி -20 மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற பிரதமர் மன்மோகன் சிங் நேற்றைய தினம் புதுடில்லி திரும்பினார். (அ-2)



ரஷ்யாவின் சென்பீட்டர்ஸ் பேர்க் நகரில் நடைபெற்றுவரும் ஜி – 20 மாநாட்டில் கலந்து கொள்ள வந்த கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பரை ஐரோப்பிய கமிஷன் தலைவர் ஜோஸ் மானுவேல் பரோசா சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# ஹிட்லரின் நீல நிற மோத்திரம் விற்பனைக்கு வருகின்றது



அடல்ப் ஹிட்லரின் நீலநிற மாணிக்க கற்களாலான சுவஸ்திக் முத்திரை கொண்ட மோதிரம் விற்பனைக்கு விடப்படவுள்ளது.


அவரது சுவஸ்திக் முத்திரை கொண்ட மோதிரத்தை கார்ல் பெர்தோல்ட் என்பவர் வடிவமைத்தார்.

இதில் உள்ள சுவஸ்திக் முத்திரை 16 நீலநில மாணிக்க கற்களால் ஆனது, ஆனால் தற்போது ஒரு கல் காணாமற் போயுள்ளது.

இந்நிலையில் அலெக்ஸாண்டர் வரலாற்று அமைப்பின் மூலம் இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன. அப்போது இந்த மோதிரமும் ஏலத்திற்கு வரவுள்ளது.

இது ஒரு இலட்சம்டொலர் வரை ஏலத்தில் போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# உலகில் மிகப் பெரிய எரிமலை பசுபிக் கடலில் கண்டுபிடிப்பு



(ஹூஸ்டன்)

உலகிலேயே மிகப் பெரிய எரிமலை ஜப்பான் நாட்டிற்குக் கிழக்கே ஆயிரத்து609 கி.மீ. தூரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமு மசிஃப் என்று பெயரிடப்பட்டுள்ள இது சூரிய மண்டலத்தில் இரண்டாவது பெரிய எரிமலையாகும். செவ்வாய்க் கிரகத்தில் இருக்கும் முதல் பெரிய எரிமலையாகக் கருதப்படும் ஒலிம்பஸ் மோன்ஸ் இதைவிட 25 சதவிகிதம் பெரியதாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

130-145 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் உலகின் நீர்ப்பரப்புக்கடியில் அமைந்திருந்த ஷட்ஸ்கிரைஸ்என்ற மலைத்தொடரில இருந்த பல எரிமலைகள் வெடித்ததன் மூலம் இந்த எரிமலை உருவாகியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பரப்பளவில் லண்டன் தீவுகளை அல்லது நியூமெக்சிகோ மாகாணத்தை இது ஒத்துள்ளது.

இதுநாள் வரை, ஆராய்ச்சியாளர்கள் இந்த எரிமலையின் அமைப்பு குறித்து உறுதி செய்துகொள்ள முடியாதிருந்தார்கள். ஆனால், தற்போது உலகிலேயே பெரியதான ஒற்றை எரிமலை இது என்ற முடிவிற்கு அவர்கள் வந்துள்ளனர். (அ-2)

# காஷ்மீருக்கு விடுதலை கிடைக்கும் வரை புனித போர் தொடரும் – ஜமாத் அமைப்பு

(இஸ்லாமாபாத)

பாகிஸ்தானின் லஷ்கர் - இ-தொய்பா தீவிரவாத இயக்கம் தற்போது அங்குதடை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து ஜமாத் உத்தவா என்ற பெயரில் இந்த இயக்கம் இயங்கி வருகிறது.

இதன் தலைவர் ஹபீஸ் முஹமது சயீத் இந்தியாவுக்கு எதிராக செயற்பட்டு வருகிறார். மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர் இவரே. இவரது தலைக்கு அமெரிக்கா 70 கோடி ரூபா பரிசு தருவதாக அறிவித்துள்ளது.

இவர் அண்மையில் இந்தியாவுக்கு எதிராக பேரணி ஒன்றையும் நடத்தியுள்ளார். ராவல் பிண்டியில் தொடங்கிய இப்பேரணிக்கு தீவிரவாதி சயீத்கே தலைமை தாங்கினார்.



இப்பேரணி தலைநகர் இஸ்லாமாபாத் வரை நடந்தது. பேரணியை தொடங்கி வைத்து சயீத் உரையாற்றும் போது, "நமது உரிமைக்காக இந்தியாவுடன் போரிட வேண்டும். ஜம்மு காஷ்மீரில் இந்தியா போர் ஒப்பந்தத்தை மீறியுள்ளது.

பாகிஸ்தானில் இந்தியா ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் உள்ளனர். இந்தியாவும், அமெரிக்காவும் நம்மீது கோபமாக உள்ளன. காஷ்மருக்கு விடுதலை கிடைக்கும் வரை நமது புனித போர் தொடரும். காஷ்மீர் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்ய நாம் ஒவ்வாருவரும் தயாராக இருக்க வேண்டும்.

பாகிஸ்தான் சிறையில் கொல்லப்பட்ட இந்திய கைதி சரப்ஜித்சிங் ஒரு தீவிரவாதி. அவரது உடலுக்கு இந்திய அரசு மரியாதை அளித்துள்ளது. தீவிரவாதியான அவருக்கு எப்படி அரசு மரியாதை கொடுக்க முடியும் என்றார்.

இப் பேரணியில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் இந்தியாவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். (அ-2)

# STUDY in UK




- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.

நீங்கள்
City&Guilds B1 or IELTS
பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாக இருந்தால் உங்களுக்காக, எமது நிறுவனம் "கல்லூரிக்கட்டணம்" மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு பணத்தை செலவு செய்கின்றது.

(சி/4661)

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள். *பரீட்சையில் 100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்.




கடந்த 6 மாதங்களில்
30 மாணவர்களிற்குமேல்
City&Guilds(UK)
English Diploma (A1,B1)
பரீட்சையில் சிறந்த,
அதிசிறந்த பெறுபேறுகளை
பெற்றுக்கொண்டுள்ளனர்

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.

WORLD EDUCATION CONSULTANCY
No:377,Sangaththanai, Chavakachcheri
T.P: 0779 265447,021 7200 989

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகில்

e mail: chec.usr@gmail.com Gov.Reg No:TN/DS/UC/0324


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## சேவை நலன் பாராட்டு



48 ஆண்டுகளாக தொடர்ந்தும் சேவை ஆற்றிக்கொண்டிருக்கும் முதன்மை ஆசிரியர் **செல்வி லீலாவதி மாரிமுத்து** அவர்களின் சேவையை பாராட்டி வாழ்த்துகின்றோம். இன்று இவ்விழாவில் முன்பள்ளி கல்வி டிப்ளோமா பட்டம் பெறும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



திருமதி பொன்னம்பலம் சர்மிலா



செல்வி யுகந்தினி லோகேஸ்வரன்



செல்வி தேவராசா தயாளினி



திருமதி அன்ரன் பிலிப்ராஜ் றொஸானி

**பெற்றோர், ஆசிரியர் சங்கமும் சித்தங்கேணி மாதர் சங்கமும் முகாமைத்துவ குழுவும்**


## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை அரச
வைத்தியசாலைக்கு முன்பாக
4 பரப்பு அரச உறுதிக் காணி
விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு: 0779444892**

(3848)

## வீடு வாடகைக்கு

யாழ்.வேம்படி
பாடசாலைக்கு அருகே
வீட்டின் ஒரு பகுதி
வாடகைக்கு விடப்படும்.
0778730129
110, 1 ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

## 3+ பிள்ளைக்கான விசேட ஆங்கில கல்வி முறை

உங்கள் குழந்தை வீட்டில்
இருந்தவாறே முன்பள்ளி கல்வியை
பெற்றிட இன்றே அழையுங்கள்
தரம் : 1-5 வரை
**மேலதிக விபரங்களுக்கு**
**0779332890**

(3884)

## துருக்கி வேலை அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்

**(துருக்கி ஐரோப்பிய யூனியனில் உள்ள ஓர் நாடு)**

- ஆண், பெண் இருபாலாருக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

## WORK PERMIT VISA

- புதுப்பித்துக் கொள்ளக்கூடிய இரண்டு வருட வேலை ஒப்பந்தம்
- மாதாந்த சம்பளம் 690 Euro (690 x 180 = 124,200/=)

**வேலை: பொதி செய்தல் (Packing Section)**

- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்

(வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து சட்டரீதியான பயணம்)

- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**முன்பதிவுகளுக்கு மட்டும் : 0214921831, 0214921832**


**அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்,**
**இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

(3378)


# மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு :
29.06.1929
கர்த்தருக்குள்:
08.09.2010



வாஞ்சை மிக்க துணைவியாக
பாசம்மிக்க அன்னையாக
வீரியம்மிக்க கல்வியாளராக
இறைமகனின் பிரியமகளாக

## அமரர் திருமதி சிசிலியா குணமணி இராசரத்தினம்

(முன்னாள் உப அதிபர் - யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

நிறை வாழ்வு வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவியின் ஞாபகார்த்த ஜெபக் கூட்டம் இன்று (08.09.2013) மாலை 4.30 மணிக்கு எமது இல்லமான 'பெதனி கடற்கரை வீதி, பருத்தித்துறையில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், குடும்ப நண்பர்கள், திருச்சபைக் குடும்பத்தினர் யாவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'பெதனி', கடற்கரை வீதி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்


HND/DIPLOMA ACCOUNTING & FINANCE

BUSINESS MANAGEMENT Graduate Diploma /HND

CTH CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

Hotel Management
Diploma / Advanced Diploma



Basic English for the Real World




Spoken English
IELTS English
Teacher Training
English for work

IT and computing courses

ICDL International Computer Driving Licence
CIW
CompTIA A+

(சி/4627)

Web Design /Multimedia /Computer Hardware

- வெளிநாடுகளில் உயர்கல்வி வசதிகள்
- இலங்கையில் வேலைவாய்ப்புக்கள்
- முதல் 100 மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில்கள்

# London Business College

116, Palaly Road, Jaffna 0775301299 0212217105

Vathiri Road, Uddupiddy Jucntion, Uddupiddy

கொழும்பு யாழ்ப்பாணம் கிளிநொச்சி வடமராட்சி

# அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறும் பிரமந்தனாறு மக்கள்

(புளியம்பொக்கணை)

**கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரமந்தனாறு கிராமசேவகர் பிரிவில் வாழும் மயில்வாகனம்புரம், கொழுந்துபுலவு பிரமந்த னாறு கிராம மக்கள் தமக்கு அடிப்படை வசதிகள் எது வும் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.**

கடந்த 2011 ஆம் ஆண்டு இப்பகுதியில் 650 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வாழ்ந்து வருகின்ற நிலையில் மயில்வாகனபுரம் தவிர்ந்த ஏனைய கிராமங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படாமையால் அம்மக்கள் பெரிதும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள பிரதான வீதிகள் மற்றும் உள்வீதிகள் எவையும் புனரமைக்கப்படவில்லை.

அரச பேருந்து போக்குவரத்து வசதி எதுவும் இல்லை. ஒரு தனியார் பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. இதனால் அதிகளவு பணம் செலவு செய்தே மக்கள் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.



மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்களாக இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் கிடக்கும் இக்கிராம மக்களுக்கு மின்சார வசதியும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

மயில்வாகனபுரத்தில் பாலம் ஒன்று புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பெரும் அச்சத்துடன் பயணிக்கின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட இம் மக்களுக்கு வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கான உபகரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

எனவே, தமது நிலைமைகளைக் கருத்திலெடுத்து தமக்கு உதவ எவராவது முன்வர வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இப் பகுதி மக்கள் காத்திருக்கின்றனர். (ம-263)

## வருடாந்த உற்சவம்

(பூநகரி)

பூநகரி ஜெயபுரம் அருள்மிகு வரசித்தி வழிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை 9 ஆம் திகதி திங்கட்கிழமை மகாசங்காபிஷேக நிகழ்வு சாவகச்சேரி சிவஸ்ரீ பால குமார குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

உற்சவ கால 10 நாட்களும் சமய சொற்பொழிவுகளும் சுற்றாடலில் உள்ள ஆலயங்க ளில் கூட்டுப் பிரார்த்தனை குழுக்களினால் தினமும் பிரார்த் தனை இடம்பெறவுள்ள தென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-84)

## வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் அசௌகரியம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாணிக்க பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீதி போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் பழுதடைந்துள்ளது.




அத்தோடு 10 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்தப் பகுதிக்கு மின்சாரமும் வழங்கப்படவில்லை.

இக் காரணங்களால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக இப் பகுதி மக்கள் அலைந்து திரிந்து உரிய தரப்பினர்களிடம் நேரடியாக முறையிட்டும்கூட உரிய தரப்பினர் இது விடயத்தில் பாராமுகமாக இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாக விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு தமக்கு உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (ம-254)

# மூன்று இந்து ஆலயங்களில் திருடர்கள் கைவரிசை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்திருந்த மூன்று இந்து ஆலயங்களில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் உருத்திரபுரம் சிவன் கோவிலின் உண்டியல் உடைக் கப்பட்டு அதனுள் இருந்த பணம் களவாடப்பட்டுள்ளது.

மேலும் உருத்திரபுரம் கூழாவடியில் பளையடி விநாயகர் ஆலயத்துக்குள் நுழைந்த திருடர்கள் மூலஸ்தானத்தின் விநாயகர் சிலைப் பகுதியைத் தோண்டிய வேளை அப்பகுதியில் சன நடமாட்டம் காணப்பட்டமையால் தொடர்ந்து இத் திருட்டு நடைபெறவில்லை.

மேலும் உருத்திரபுரம் பொறிக்கடவை ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதோடு 7 அம்மன் தாலிப் பொட்டும் 3பவுண் சங்கிலி ஒன்றும் திருடப்பட்டுள்ளது.

அதே தினம் உருத்திரபுரம் எள்ளுக்காடு முருகன் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பணம் களவாடப்பட்டுள்ளது.

இங்குள்ள பல இந்து ஆல யங்களில் இதற்கு முன்னரும் பல திருட்டுச் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன என சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம-254-60)

# பூநகரி சனசமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்


பூநகரி பகுதியில் போர்க்கால இடப்பெயர்வுக்கு முன்னதாக 19 கிராம சேவகர் பிரிவுகளில் இயங்கி வந்த 30 இற்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களில் பல இப்பொழுது புனரமைப்பு செய்யப்படாத நிலையில் உள்ளதால் உள்ளூராட்சி திணைக்களத்தின் சுற்று நிருபப்படி பதிவு இலக்கங்களை வழங்கமுடியாத நிலை உள்ளதாக பூநகரி பகுதி சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இதுவரை புனரமைப்பு செய்யப்படாத சன சமூக நிலையங்கள் தங்கள் அங்கத்தவர்களைக் கொண்ட விசேட பொதுக் கூட்டத்தை நடத்தி புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்து விண்ணப்ப படிவங்களை பெற்று சன சமூக நிலையங்களைப் பதிவு செய்து புதிய பதிவிலக்கங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். தவறின் பல அரச சலுகைகளை அவை இழந்து விட நேரிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தமது கிராம எல்லைக்குட்பட்ட கிராமம் சம்பந்த மான அபிவிருத்தி சேவைகள் சன சமூக நிலையங்களின் சிபார்சுகளினூடாக செய்யப்படவிருக்கின்றன.

அவ் ஒப்பந்த வேலைகளை இச் சனசமூக நிலையங்களே பொறுப்பேற்று செய்வதுடன் அவற்றின் மூலம் கிடைக்கும் இலாப பணத்தில் தமது சனசமூக நிலையத்தை அபிவிருத்தி செய்வதோடு வேறு பல பொது வேலைகளுக்கும் செலவிட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சனசமூக நிலையங்கள் பிரதேச சபையில் பதிவு செய்து தமது புதிய பதிவிலக்கங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை பொதுக் கூட்ட அறிக்கையுடன் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-84)



பூநகரி வாடியாடி நகர் பகுதியில் வீதி அகலிப்பு, பணி கால்வாய்கள் அமைக்கும் பணி என்பன மந்தகதியில் நடைபெற்று வருவதால் கால்நடையாக செல்வோரும் வாகனங்களில் பயணிப்போரும் பயணிப்பதில் சிரமப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- பூநகரி செய்தியாளர்)

நம்பிக்கையில்லாத பயமும் கிடையாது.
பயமில்லாத நம்பிக்கையும் கிடையாது.
-வால்ட்டேர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒய்வுநிலை நீதியரசருக்கு ஓர் அன்பு மடல்

மரியாதைக்குரிய ஒய்வுநிலை நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு அன்பு வணக்கம். தேர்தல் வியூகத்தில், நேரம் இல்லாத சூழ்நிலையில் தங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுவதற்காக மன்னித்தருளுக.

இருந்தும் எங்கள் மக்களின் எதிர்காலம் - உங்களின் அரசியல் வெள்ளோட்டப் பயணம் என்பன பற்றி அதீத கவனம் கொண்டதன் காரணமாக இராமயாண இதிகாச தத்துவத்தை அன்பு மடலில் வரைந்திருக்கின்றோம். ஏற்றிடுக.

சீதா பிராட்டியைக் கடத்திச் சென்றதால் இராவணன் மீது பலருக்கு வெறுப்பு இருக்கலாம். ஆனால், இராவணன் மிகவும் நல்லவன். இருந்தும் நல்லவர்களும் சிலவேளைகளில் மகா பிழை விடக்கூடும் என்பதற்கு அவனும் உதாரணமாகி விட்டான்.

சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் சீதையைக் கடத்துவதற்கு அவனின் சகோதரியாகிய சூர்ப்பனகையே காரணமாகினாள். ஆக, இராவணனின் பெரும்புகழ் பாழாகிப் போவதற்கு சூர்ப்பனகை காரணமானாள் என்பதை நினைக்கும்போது இராவணன் பாவமென்று எண்ணத் தோன்றும்.

இராமன் மீது மையல் கொண்ட சூர்ப்பனகை, மூக்கு அறுபட்டதும் தன் பிழை உணர்ந்திருக்க வேண்டும்.

ஆனால், அவள் அதை இராமர் செய்த பிழையாகக் கருதினாள். அதனால் இராமனுக்குத் தண்டனை கொடுக்க எண்ணி அதற்குத் தந்திரோபாயம் வகுத்த சூர்ப்பனகை, மூக்கு அறுபட்டு குருதி நனைந்த தேகத்தோடு; ''அரனிருந்த மலையெடுத்த அண்ணாவே! அண்ணாவே!'' என்று அழுது புரண்டு தன் அண்ணன் இராவணன் இருக்கும் இடம் நோக்கிச் செல்கிறாள்.

மலையெடுத்த புகழை இப்போது அவள் உச்சரிக்க வேண்டிய தேவை என்ன?

தனது மூக்கை அறுத்த இராமர்-இலட்சுமணர்களுக்கு தண்டனை கொடுப்பதாக இருந்தால், தண்டனை கொடுக்க வல்லவனை உசுப்பேத்த வேண்டும்.

மலையெடுத்த புகழை உடையவனாகிய நின் தங்கை சூர்ப்பனகைக்கு மூக்கறுத்தவர்களை சும்மா விடலாமோ! மிக உன்னதமான பலம் பொருந்திய இராவணன் இருக்கும்போது இது நடக்கலாமோ! என்று ரோஷம் ஊட்டி இராவணனை உணர்ச்சி வசப்படுத்துகிறாள்.

இவ்விடத்தில்தான் சூர்ப்பனகை தான் விட்ட மகா தவறை மறைக்கிறாள். மன்னன் இராவணனோ மூக்கறுபட்டதற்கான காரணத்தைக் கேட்க முடியாதவனாய் சூர்ப்பனகையின் வஞ்சத்தனமான புகழ்பாடலில் அறிவிழந்து போகின்றான். இங்குதான் இராவணனின் அழிவு எழுதப் படுகின்றது.

இது தவிர, இலங்காபுரியில் போர்ப்படைகளின் சங்குநாதம் ஒலிக்கும்போது, தம்பி கும்பகர்ணனை உறக்கத்தில் இருந்து எழுப்புவதற்கு யானைப்படையை அனுப்ப வேண்டிய துன்பம். இங்குதான் இராவணன் என்ற பாத்திரம் பாவப்பட்டது என்ற முடிவுக்கு நம்மை வரச் செய்யும்.

ஆக, ஒரு பெரும் மாவீரன் சூர்ப்பனகையால் அழிக்கப்பட்டான் என்ற வரலாறு இராமயாண இதிகாசத்தில் மறைந்தும் - மறந்தும் நிற்கிறது.

இராவணன் என்ற மாவீரன் எங்ஙனம் தன் தங்கை சூர்ப்பனகையின் உசுப்பேத்தலால் அழிந்தானோ அதுபோல மாவீரர்கள் பலரின் வரலாறுகள் பாவமாய் முடிந்திருக்கின்றன.

ஆம், சேர்ந்திருந்து உசுப்பேத்தி சுயநலம் அனுபவித்த சூர்ப்பனகைகளால் அழிக்கப்பட்ட இழப்புகள் இலங்கையில் இப்போதும் நடந்திருப்பதுதான் வேதனை.

எதுவாயினும் நீங்கள் கற்றறிந்த நீதியரசர். உங்களுக்கு நாம் இதிகாசக்கதையைக் கூறுவது நகைப்புக்குரியது. ஆனாலும் சேர்ந்திருந்து அறுப்பது சுலபம் என்ற **பொய்ம்மையாளரின் விதி** இன்னும் உயிர்ப்புடன் இருப்பதால் அதுவிடயத்தில் கவனம் தேவை.

## 'பிரபாகரன்' பெயரில் படத்தை இயக்கி சொத்தை இழந்தார் தயாரிப்பாளர்

(கொழும்பு)

தீவிரவாதம் எனக்கூறி பிரபாகரன் என்ற சிங்களத் திரைப்படத்தை தயாரித்து சொத்துக்களை இழந்த தயாரிப்பாளர் தனக்கு நேர்ந்த நிர்க்கதி நிலைமையை விளக்கியுள்ளார்.

தீவிரவாதத்தின் கொடூரம் பற்றிய திரைப்படம் ஒன்றை தயாரித்து அதனை உலகத்திற்கு கொண்டு சென்று தனது சகல சொத்துக்களை இழந்து விட்டதாக ரோமில் வசிக்கும் சிங்களவரான ஒஸ்மன் டி சில்வா தெரிவித்தார்.

அநுராதபுரம் ஆலங்குளத்தில் பிறந்து வளர்ந்த தான் ஜயஸ்ரீ மகா போதி நடத்தப்பட்ட தாக்குதலை நேரில் பார்த்துள்ளதாகவும் அன்று மனத்தில் ஏற்பட்ட விடயங்களை அடிப்படையாக கொண்டு பிரபாகரன் என்ற திரைப் படத்தை தயாரித்ததாகவும் அவர் கூறினார்.

அந்தப் படத்திற்கு தான் 175 இலட்சம் ரூபாய்களை செலவிட்டபோதும் தனது கைகளுக்கு வெறும் 5 இலட்சம் ரூபாவே கிடைத்தது என்றும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

ரோமில் தனக்கிருந்த தொலைபேசி நிலையம், சில்லறை வர்த்தக நிலையம், அரைவாசி பணம் செலுத்தி கொள்வனவு செய்த வீடு, ரோமில் ஏற்பட்ட விபத்து காரணமாக கிடைத்த 50 இலட்சம் இழப்பீட்டு தொகை ஆகியவற்றை தான் இந்த படத்திற்காக இழந்துவிட்டதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

தற்போது ரோமில் முதிய பெண்ணொருவரை பராமரித்து அதில் கிடைக்கும் பணத்தை கொண்டு வாழ்க்கை நடத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-8)

## விடத்தற்பளைக்கு பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணத்திலிருந்து விடத்தற்பளைக்கான பேருந்து சேவை நாளை திங்கட்கிழமை முதல் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. விடத்தற்பளை பொதுமக்களினதும் கிராம அபிவிருத்தி சங்கத்தினரதும் கோரிக்கைக்கிணங்கவே பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையின் பேரிலேயே இப் பேருந்து சேவை ஆரம்பித்து வைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் உசன் ஊடாக விடத்தற்பளை வரையான இப் பேருந்து சேவை தினசரி 3 தடவைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (எ-5)

## திருக்குறள் மனனப்போட்டி புதன்கிழமைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த திருக்குறள் மனனப்போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமைக்கு பிற்போடப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டி ஓ.எல்.ஆர். பாடசாலையிலும் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டி கலட்டி மெ.மி. பாடசாலையிலும் கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டி நாவலர் வித்தியாலயத்திலும் அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா அறிவித்துள்ளார். (எ)

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை மாத்தளன் பகுதியில் காணாமல் போனதாக கூறப்படும் ஆணொருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

51 வயதான இராசரட்ணம் திலகேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாடசாலையொன்றில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் காணாமல் போயிருந்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அவர் தனது வீட்டின் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


சடலம் தற்போது முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-8)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எல்லாரும் வாழியடா



பொறி வழியிலிற் செல்லாதே- தம்பி
போனதை யெண்ணிக் கொள்ளாதே
கிறிய ங் கீழ்மையுஞ் செய்யாதே- தம்பி
கெட்டவர் மேல் நட்பு வையாதே

புத்தியை ஒன்றிலும் நாட்டாதே- தம்பி
புகழும் இகழுஞ் சூட்டாதே
எத்தொ ழிலைநீ செய்தாலுந்- தம்பி
ஈசனுக் கர்ப்பணம் பண்ணிடடா

## தியாகங்களுக்கு தயாராகி இயேசுவை பின் தொடர்வோம்

இனறு நமக்குத் தரப்படும் வேதாகமப் பகுதியில் இயேசு தன்னை பின் பற்ற விரும்பும் சீடர்கள் தம் வாழ்வை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் எனும் நோக்கில் இரண்டு எடுத்துக்காட்டுகளை கூறுகிறார்.

கோபுரம் கட்ட விரும்புகிறவர் அதற்கான செலவுகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தம்மால் இயலும் என்று உணர்ந்த பின்னரே, அதைக் கட்டத் தொடங்க வேண்டும்.

### பரமபிதா காட்டிய பாதை

அதுபோல, போர் தொடுக்கச் செல்லும் அரசரும் தமது வலிமையையும் எதிரே வருபவரின் வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்தபின்னரே போருக்குச் செல்லவா, அல்லது அமைதியை நாடவா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதுபோலத்தான் இயேசுவைப் பின்பற்றுவோரின் சீடத்துவம் இருக்கவேண்டும் என்கிறார் இயேசு.


தத்துவ மேதை சோக்ரட்டீஸ் ஒரு முறை தம் சீடர்களை அழைத்தார். ஒரு நீர்த்தொட்டியைக் காட்டினார். தொட்டியில் நீங்கள் என்ன பார்க்கிறீர்கள் என்று ஒவ்வொருவராகக் கேட்டார்.

முதலாமவர்: தொட்டியில் நான் எனது நிழலைப் பார்க்கிறேன் என்றார். இரண்டாமவர்: எனது உருவமும் தெரிகிறது. சுற்றி நிற்கின்ற உங்கள் உருவமும் தெரிகிறது என்றார். மூன்றாமவர்: தொட்டியின் நீரில் நீந்துகின்ற மீன்கள் நன்றாகத் தெரிகின்றன என்றார். மூன்றாவதாகக் கூறிய சீடரை மட்டுமே முதன்மையானவன் எனறு ஏற்றுக் கொண்டார் சோக்ரட்டீஸ்.

சீடத்துவ வாழ்க்கை ஒரு உன்னத அழைப்பு. இயேசுவின் சீடராயிருக்க என்ன செய்யவேண்டுமென்று இன்றைய இறைவார்த்தைப்பகுதி சொல்கிறது:"என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும் ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது.

தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது"

சீடராக இயேசுவைப் பின்பற்றுவதென்பது ஏதோ ஓரிரவில் தோன்றி மறையும் அழகான, ரம்மியமான கனவு அல்ல.



மாறாக, வாழ்நாள் முழுவதும், ஒவவொரு நாளும், ஒவ்வொரு இரவும் பகலும் நம் சிந்தனை, சொல், செயல் இவைகளை நிறைக்க வேண்டிய ஒரு தாகம் என்பதைத்தான் இயேசு இன்று சொல்லியிருக்கிறார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இயேசுவின் சீடர்கள் என்றால், குருக்கள், துறவறத்தாருக்கு என்று எண்ணி, நாம் தப்பித்துக் கொள்ள முனைகின்றோம்.

இயேசு இந்த வார்த்தைகளைத் தன் சீடர்களுடன் தனித்து இருக்கும் போது சொல்லவில்லை. மாறாக, தன்னைப் பின் தொடர்ந்த "பெருந்திரளான மக்களை" நோக்கி, நம் ஒவ்வொருவரையும் நோக்கிச் சொல்கிறார்.

தியாகங்களுக்குத் தயாராக இல்லாத உள்ளங்கள் என்னைப் பின் தொடர்வது இயலாது என்று கூறும் இயேசுவுக்கு நமது பதில் என்ன?



செரீனா வில்லியம்ஸ்



அசரென்கா

# அமெரிக்க டெனிஸ்

## இறுதி ஆட்டத்துக்கு செரீனா, அசரென்கா தகுதி

அமெரிக்க திறந்த டெனிஸ் சுற்றுப்போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்துக்கு செரீனா வில்லியம்ஸும் அசரெங்காவும் தகுதி பெற்றுள்ளனர்.

அமெரிக்க திறந்த டெனிஸ் சுற்றுப் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் அரை இறுதி ஆட்டத்தில், உலகின் முதல் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), அரை இறுதியில் 5ஆம் நிலை வீராங்கனையான லீ நாவை எதிர்கொண்டார். இதில் செரீனா வில்லியம்ஸ் 6:0, 6:3 என்ற நேர்செற் கணக்கில் எளிதில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

அவர் 6ஆவது முறையாக இறுதிப் போட்டியில் நுழைந்துள்ளார். இதில் 4 முறை அவர் அமெரிக்க டெனிஸ் பட்டத்தை வென்றுள்ளார். 1999, 2002, 2008, 2012 ஆம் ஆண்டுகளில் பட்டத்தை வென்றார். 2001, 2012ஆம் ஆண்டுகளில் இறுதிப் போட்டியில் தோற்றார்.

செரீனா வில்லியம்ஸ் இறுதிப் போட்டியில் இரண்டாம் நிலை வீராங்கனையான விக்டோரியா அசரென்காவை சந்திக்கிறார். பெலாராசை சேர்ந்த அவர் அரை இறுதியில் 6:4, 6:2 என்ற நேர் செற் கணக்கில் பிளாவியா பெனாட்டை (இத்தாலி) தோற்கடித்தார். அசரென்கா 2ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

### பயஸ் ஜோடி இறுதிக்கு

கடந்த ஆண்டை போலவே தற்போது இருவரும் இறுதிப் போட்டியில் மோதுகிறார்கள். அரை இறுதியில் நம்பர் 1 ஜோடியான பொப் பிரையன், மைக் பிரையன் சகோதரர்களுடன் மோதிய பயஸ் ஜோடி 3:6 என்ற கணக்கில் முதல் செற்றை இழந்து பின்தங்கியது. அடுத்த 2 செற்களிலும் ஆக்ரோஷமாக விளையாடிய பயஸ் ஜோடி 3:6, 6:3, 6:4 என்ற செற் கணக்கில் வென்று இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

## ஆரம்பமாகியது ஒலிம்பிக் சபையின் 125 ஆவது பொதுக் கூட்டம்

சர்வதேச ஒலிம்பிக் சபையின் (ஐ.ஓ.சி.) 125ஆவது ஆண்டு பொதுக்குழு கூட்டம் ஆர்ஜென்டீனா தலைநகர் பியூனஸ் அயர்ஸ் நகரில் நேற்று ஆரம்பமாகியது. இக் கூட்டத்தொடர் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. 2020ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை நடத்துதற்கான உரிமையை பெறுவதில் இஸ்தான்புல் (துருக்கி), டோக்கியோ (ஜப்பான்), மாட்ரிட் (ஸ்பெயின்) ஆகிய நகரங்கள் போட்டியிடுகின்றன. இதில் எந்த நகருக்கு ஒலிம்பிக்கை நடத்தும் வாய்ப்பை அளிப்பது என்பது குறித்து வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்யப்படுகிறது.

2020ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இடம்பெறும் விளையாட்டுக்கான ஒட்டுமொத்த பட்டியலில் இன்னும் ஒரே ஒரு இடம் மட்டும் காலியாக உள்ளது. இந்த ஒரு இடத்திற்காக 3 விளையாட்டுக்கள் போட்டியிடுகின்றன. (மல்யுத்தம், ஸ்குவாஷ், பேஸ்பால் சாப்ட்பால்)

வாக்கெடுப்பில் பெரும்பாலான ஐ.ஓ.சி. உறுப்பினர்களின் ஆதரவை பெறும் விளையாட்டு ஒலிம்பிக்கில் இணைக்கப்படும். ஒலிம்பிக்கில் மீண்டும் மல்யுத்தம் இடம் பிடிக்கும் என்று இந்திய வீரர் சுஷில் குமார் தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல்.போன்று துப்பாக்கி சுடுதல் போட்டியும் விரைவில் நடத்தப்படும்

### - ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்திய வீரர்



இந்திய பிறீமியர் லீக் (ஐபிஎல்) கிரிக்கெட் போட்டி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அதைப் போல ஹொக்கி மற்றும் பூப்பந்தாட்ட போட்டிகள் நடத்தப்பட்டன. தற்போது ஐபிஎல் வடிவிலே, கிளப் அணிகளுக்கு இடையேயான துப்பாக்கி சுடுதல் போட்டியை நடத்த லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்திய வீரர் ககன் நரங் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு நடத்தினால், துப்பாக்கி சுடுதல் போட்டி இந்தியாவில் பிரபலமடையும் என்றும் அவர் கூறியுள்ளார். இது குறித்து ஐதராபாதில் பிடிஐ செய்தியாளரிடம் அவர் கூறுகையில்,

ஐபிஎல் போட்டியைப்போல, துப்பாக்கி சுடுதல் போட்டியை நடத்துவது சவாலானது. ஏனெனில், ஒலிம்பிக்கில் பின்பற்றப்படும் விதிமுறைகளை அமுல்படுத்துவது கடினம். அதனை இலகுவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் மூன்று வகையான (ஷாட் கன், ரைஃபிள் மற்றும் பிஸ்டல்) போட்டிகளைக் கொண்ட லீக் போட்டி நடத்தப்படும்.

3 வகையான துப்பாக்கி சுடுதல் போட்டியிலும் வெவ்வேறு விதிகள் பின்பற்றப்படுகின்றன. அது, ரசிகர்களைக் கவரும் வகையில் இருக்க வேண்டும். இது குறித்து ரசிகர்கள் அறியும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

துப்பாக்கி சுடுதல் லீக் போட்டி எப்போது நடத்தப்படும் என்ற கேள்விக்கு, அதற்கு காலநிர்ணயம் எதுவும் விதிக்கப்படவில்லை. ஆனால், விரைவில் லீக் போட்டிகள் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்தியாவில் இளம் வீரர்கள் பலர் உருவெடுத்து வருகின்றனர். இந்த சமயத்தில், அரசு கண்டிப்பாக துப்பாக்கி சுடுதல் வீரர்களை ஊக்கப்படுத்த வேண்டும். நம்மிடம், திறமையான வீரர்கள் பலர் உள்ளனர். எனது பயிற்சிக் கல்லூரியில் உள்ளவர்கள் பலர், முதல் சுடுதலிலேயே இலக்கை எட்டுகின்றனர். அதனால், சுயநலம் இன்றி இப்போட்டியை நாம் ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## பூப்பந்தாட்ட வீராங்கனை ஜுவாலா மீது குற்றச்சாட்டு



இந்தியன் பூப்பந்தாட்ட லீக் தொடரில் டில்லி வீராங்கனைகளை போட்டியில் விளையாட விடாமல் தடுத்ததாக ஜுவாலா கட்டா மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

பெங்களூரில் கடந்த மாதம் 25ஆம் திகதி பீட்ஸ் அணிக்கு எதிரான போட்டியிலே டில்லி ஸ்மாஷர்ஸ் வீராங்கனைகளை விளை யாட விடாமல் தடுத்துள்ளார்.

அதாவது, காயமடைந்த வீரர் ஹு யூன்குக் பதில், ஜான் ஓ ஜோர்ஜென்சனை சேர்க்க அந்த அணி முயன்றது. இதற்கு ஐபிஎல் நிர்வாகம் அனுமதி அளித்தது.

ஆனால் இந்த மாற்றத்தை ஜுவாலா விரும்பவில்லை. மாற்றக் கூடாது என்று கோரிக்கை வைத்தார்.

மேலும் நமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் இந்தப் போட்டியில் நாம் விளையாடக் கூடாது என்றும் சக டில்லி வீரர்களை வலியுறுத்தினாராம்.

இதனையடுத்து பங்கா பீட்ஸ் அணி தனது வீரரை மாற்ற மறுப்பு தெரிவித்துவிட்டது. அதன் பிறகே டில்லி வீரர்களை விளையாட அனுமதித்தாராம் ஜுவாலா. இந்நிலையில் இந்த விடயம் தற்போது ஐபிஎல் நிர்வாகத்திற்கு தெரியவந்துள்ளது.

இதனையடுத்து 14 நாட்களுக்குள் விளக்கம் அளிக்குமாறு ஜுவாலாவுக்கு ஒழுங்கு நடவடிக்கைக் குழு அறிவித்துள்ளது.

மேலும் இந்த விசாரணையை ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு நடத்தவும் ஐபிஎல் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வாய்மொழிமூல....

முன்னர் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர்களில் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பிலான இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழுவை இலங்கை அரசாங்கம் ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்திருந்தது.

இலங்கையில் கடந்த மாதம் 25-ம் திகதி முதல் 31ஆம் திகதி வரை தங்கியிருந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, ஜனாதிபதி, அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள், எதிர்க் கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் மனிதவுரிமை ஆர்வலர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்நிலையில், இலங்கைக்கான தனது உண்மை கண்டறியும் விஜயத்தின் போது கிடைத்த மற்றும் நேரில் கண்டறிந்த தகவல்களை உள்ளடக்கியதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது வாய்மொழி மூலமான அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளார்.(எ-8)

## எழுச்சிகளை....

ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோதும் அந்நாடுகளில் இன்னும் பிரச்சினைகள் முடிவுக்கு வரவில்லை.

இலங்கை மக்கள் மத்தியிலும் இவ்வாறான பொய்யான குற்றச்சாட்டுக்களை உருவாக்கி பிளவுகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது குறித்து மக்கள் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்றார். (எ-8)

# தமிழர்களை அழிப்பதற்கு இந்தியா முயற்சிக்கிறது!

## தா.பாண்டியன் குற்றச்சாட்டு

இலங்கைக்கு, இந்தியா போர்க்கப்பல்களைத் வழங்கக்கூடாது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில தலைவர் தா.பாண்டியன் அறிக்கை ஒன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய அரசு, இலங்கைக்கு 2 போர்க் கப்பல்களை கட்டி வருவதாகவும், கோவாவில் கட்டப்பட்டு வரும் இரு போர்க்கப்பல்களை தானமாக இந்தியா, இலங்கைக்கு 2017-ல் ஒன்றையும், 2018-ல் அடுத்ததையும் வழங்கவுள்ளதாக வந்துள்ள செய்தி அதிர்ச்சியைத் தருகிறது.

இந்திய அரசு இலங்கை அரசு பற்றி மிகத்தவறான மதிப்பீடுகளின் அடிப்படையில் உதவி வருவது கண்டிக்கத்தக்கது. இது பின்னர் ஆபத்தை விளைவிக்கும்.

இலங்கையில் கடந்த அறுபதாண்டுக் கால தமிழின அழிப்புக் கொள்கையாலும், நடவடிக்கைகளாலும் தமிழ்மொழி பேசும் இலங்கைக் குடிமக்கள் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

உலக நாடுகளே, இலங்கை அரசு மீது போர் நெறிகளை மீறியதற்காக, மனித உரிமைகளை அழித்ததற்காக விசாரிக்கப்பட வேண்டும் எனக்கோரி வருகின்றன.

இப்படியான நிலைமையில் போர்க்குற்றவாளியை விசாரிக்க வேண்டிய நாடுகளில் ஒன்றான இந்தியா, இலங்கையை நம்பிக்கைக்குரிய நட்பு நாடாகக் கருதுவதுடன் போர்க கப்பல்களைத் தந்து உதவ முடிவு எடுத்திருப்பது கண்டிக்கத்தக்கது என்றார் பாண்டியன்.(எ-8)

## காணாமல்போனோர் என....

எமது கட்சி வடமேல், மத்தி மாகாணங்களில் பிரசாரங்களினை ஆரம்பித்து பலமான ஓர் அணியினை களமிறக்கியுள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் புதிய இளைஞர் அணியொன்றினை தெரிவு செய்துள்ளோம். கொழும்பினை தலைமையாக கொண்ட எமது கட்சி வடக்கில் இடம்பிடிப்பதென்பது சவாலாகத்தான் இருக்கும். எனினும் நாம் போட்டியிருக்கின்றோம்.

வடக்கு மாகாண அரசியல் இனம் சார்ந்த அரசியலாகவும் தென்பகுதி அரசியல் மதம் சார்ந்ததாகவும் காணப்படுகின்றது.

நாட்டிலுள்ள பிரதான கட்சிகள் அனைத்தும் இந்த இருமுறையிலுமே அரசியலினை நடத்தி வருகின்றன. இந்நிலையில் எமது கட்சி இலங்கையர் என்ற ரீதியில் அரசியல் நடத்தி வருகிறது.

கடந்த காலங்களில் இனங்களுக்கு, மக்களுக்கிடையில் முரண்பாடுகளையும் நம்பிக்கையீனங்களினையும் அரசியல் கட்சிகள் ஏற்படுத்தி வந்துள்ளன.

தற்போது நடைபெறவுள்ள தேர்தலில் அரசும் அரச சார்புக் கட்சிகளும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன.

வெளிநாடுகளிற்கு தேர்தலை காட்ட விரும்பும் அரசு, நீதியான தேர்தலை நடத்த விரும்பவில்லை.

இறுதிக் கட்டப் போரில் சரணடைந்த அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்டனர்.

இறுதிப் போரின்போது முதலில் 5 ஆயிரம் பேரும் பின்னர் 5 ஆயிரம் பேரும் இறுதியில் தற்கொலைப்படை போராளிகள் உட்பட மொத்தம் 12 ஆயிரம் பேர் சரணடைந்துள்ளனர்.

23 ஆயிரம் பொதுமக்கள் மற்றும் புலிகள் கொல்லப்பட்டனர். ஒவ்வொரு நாளும் 50 பேர் வரையில் இறுதிப் போரின்போது கொல்லப்பட்டும் இருந்தனர்.

வடக்கில் காணாமல்போனோர் என கூறப்படுவோர் இவ்வாறு உயிரிழந்தவர்களாகக் கூட இருக்கலாம்.

இராணுவத்திடம் கையளித்திருந்தால் அதற்கான ஆவணங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அது வலுவான ஆவணமாகும்.

ஆகையினால் வடக்கில் காணாமல் போனோர் என யாருமில்லை. அவ்வாறு தமது உறவுகள் காணாமல் போனோர் என கூறுவோர் அரசின் நஷ்டஈட்டைப் பெறுவதற்கே என முன்னாள் இராணுவத் தளபதி தெரிவித்தார். (எ-4)

## தபால்மூல வாக்களி....

ஒழுங்குகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபடவுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு வேட்பாளர்கள் தரப்பில் இருந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

நீங்கள் எங்களுக்குத்தான் வாக்களிக்க வேண்டும். அதை மீறி வேறுயாருக்காவது வாக்களித்தால் அதை நாங்கள் அறிந்துகொள் வோம்.

உங்களது அரச உத்தியோகத்திற்கு தடங்கல் வரக்கூடாது எனில் நீங்கள் எமக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என வேட்பாளர்கள் சிலர் அரச உத்தியோகத்தர்களை மிரட்டியுள்ளதாக ஊடகங்களிடம் முறை யிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அச்சுதனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அப்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஆணையாளர்,

தபால்மூல வாக்களிப்பு என்பது மிகவும் பாதுகாப்பான ஒரு முறை. அதில் வாக்காளர்களது வாக்களிப்பு இரகசியங்கள் பாதுகாப்பாக பேணப்படும். வேட்பாளர்கள் குறிப்பிடுவது போல வாக்களிப்பு இரகசியங்களை அரசாங்கத் திணைக்களங்களில் இருந்து அறிந்து கொள்ள முடியாது.

எனவே அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது வாக்காளர் உரிமையினை தபால் மூல வாக்களிப்பில் சுதந்திரமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

யாரும் யாருக்கும் வாக்களிக்க முடியும். எனவே இதனைக் கருத்தில் கொண்டு தபால் மூல வாக்களிப்பை வாக்காளர்கள் பூரணமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலமாக வாக்களிக்க யாழ்.மாவட்டத்திலிருந்து ஒன்பதாயிரத்துக்கு மேற்பட்ட அரச அதிகாரிகள் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, வடக்குத் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இதுவரை 43 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-6, 8)



# நான்காம் ஆண்டு நினைவலைகள்

தெய்வத் திருமகன்
அருள்நங்கை சண்முகநாதன்
அன்புச் செல்வன் சிரஞ்சீவி

# சந்துதன்

அவர்கள்

தெய்வ மணம் கமழும் சந்துதனே
தேமதுரம் தரும் பேச்சினிலே
தெய்வதம் பெற்றுத் திகழ்ந்தோமே
தெவிட்டாத சிந்தை மயக்கும் திருமுகமே
தேம்பித் தேம்பி கலங்க வைத்துச் சென்றாயே
நீ எங்கும் செல்ல வில்லையே
எங்களுக்குள்ளே என்றும் நிதமானாய்
தெய்வ சந்துதனே

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
(சோமையா மாமா) குடும்பத்தினர்.
சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்,
பிரதியதிபர், யா/ அம்பன் அ.மி.த.க பாடசாலை,
தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன்
ஸ்ரீ வீரமாகாளியம்மன், வட பத்திரகாளியம்மன் தேவஸ்தானதிபதி.

(C-4464)

# இராணுவம் தயார்...

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் இராணுவத்தை தயார் நிலையில் வைக்க இந்த வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதிக்கு அதிகாரங்களை வழங்குகிறது.

இந்தநிலையில் குறித்த மாற்றம் குறித்து கண்காணிக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 2 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது.

இந்த குழு குறித்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-8)


## விநியோகஸ்தர் தேவை

யாழ். குடாநாட்டில் புத்தகங்கள் விநியோகிக்கக் கூடியவர்கள் தேவை. (இருபாலாரும்) சுயவிபரத்துடன் நேரில் வரவும்.

**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 0718474325**

(3902)

## விரைவான தொழில்வாய்ப்பு

விரைவான தொழில் வாய்ப்பு, கல்வி அறிவு அவசியமில்லை. நேர்முகப் பரீட்சை இல்லை.எம்மிடம்.நிரந்தர வேலைவாய்ப்பு, கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜாம், சொக்லட், பிளாஸ்டிக் பை, water bottle, பென்சில், கோழி இறைச்சி தொழிற்சாலை, ஆடைத் தொழிற்சாலை போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர், பொதியிடல் பிரிவு, லேபல் பிரிவு களஞ்சியப் பிரிவுகளுக்கு 18-50 ஆண்-பெண் தேவை.உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் சம்பளம் 17,000/-, 25,000/-, 32,000/- வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவீர்கள்

**தொடர்பு: 0775561883**

காரியாலயம், வவுனியா (சி- 4439)

## வாகன விற்பனைக்கு

**Dolphin 182 High Roof**



Super long JS ****
Manual Dual A/C
Full Adjestable rotate Seats
Alloyweel New Tyres
5L Engine

Very Good Condition with lease Immidiate Sale

**0772393165** (3879)

## உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு

துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் (தனியார்) வேலைவாய்ப்பு கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள் , வெல்டர், தச்சு, பெயின்டர், விமானநிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர் கேடரிங் பிரிவிலும் வெற்றிடங்கள். 18 -50 ஆண் பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18,000/-, 35,000/-, 40,000/- (தொழில் அடிப்படையில் சம்பளம்)

உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை

**தொடர்பு: 0775561883** (C-4536)

## திருமணத் தேவைக்கான கார் வாடகைக்கு விடப்படும்

தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992



இல.44, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-4621)

## Study - Work - Live Abroad

*UK Collaboration*
* University of East London
* Bedfordshire University
* Glyndwr University
* CRIC - Anglia Ruskin University
* EIC - Edinburgh Napier University
* HIBT - University of Hertforshire
* ICP - University of Portsmouth
* LIBT - Brunel University
* PDIC - Plymouth University

*Malaysia Collaboration*
* Multimedia University
* Taylor's University
* INTI University
* SEGI University
* KDU University

*Singapore Collaboration*
* James Cook University
* AEC Business School

Admissions Open for Next Intake 2014

*Australia Collaboration*
* James Cook University
* Curtin University
* MIBT - Deakin University
* ACN - La Trobe University
* PIBT - Edith Cowan University
* SIBT - University of South Australia

# Entry with G.C.E O/L
# IELTS Not required **
# Free Accommodation **
# Full Scholarships Available **
# Credit Transfer to year 2 / 3 available
# Financial Sponsorships Available
** Conditions Apply

*Swiss Collaboration*
* HTMi - Hotel Tourism Management Institute
* European University

Hotel Management with job placement in Singapore & Malaysia

iCS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060

## கடை வாடகைக்கு உண்டு

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில், பிறவுண் வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0776539926 (சி-4665)

## தையலுக்கு ஆட்கள் தேவை

பெண்களுக்கான ஆடை தைப்பதில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
**அனோஜ் தையலகம்**
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.
**0783674746** (C-4667)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய பிரிவுகள் 09.09.2013 ஆரம்பமாகின்றன.

* French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393 (C-4620)

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் நீங்கள் தேர்ச்சி பெற்றவராயின கொழும்பு, யாழ்., விஸ்வமடு போன்ற இடங்களில் (கட்டடங்கள், வாய்க்கால், வாவி) வெற்றிடங்கள். மேசன், கையுதவியாளர், தச்சு, பெயின்டர், செடலின்பாஸ்தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம் 25,000 /- , 40,000 உணவு, தங்குமிடம் உண்டு.

தொடர்பு : 0775561883 , காரியாலயம், வவுனியா (சி-4538)

## After A/Level

IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளம்



**Join @ ESOFT for IT & English (Dual Diploma)**

DiTEC INTERNATIONAL — Diploma in Information Technology

DiE — Diploma in English

3 — சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு IT டிப்ளோமா இலவச கற்கை நெறிகளுடன்

FREE Pendrive

* Accelerated Skills Acquistion Program
* Diploma in Computerized Accounting
* Banking in Financial Accounting

புதிய பிரிவுகள்
2013.09.06 காலை 9 : 00 மணி

(C-4597)

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

ESOFT — Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

www.esoft.lk 50 நாடளாவிய கிளைகள் 2012ல் மட்டும் 20,000 மாணவர்கள்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 ½ Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

* U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
* எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
* நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
* ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 09-09-2013 | 14-09-2013 | 16-09-2013 | 21-09-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.